பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 26 வெள்ளிக்கிழமை (08-06-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:194

# நோர்வே அமைச்சரும் சொல்ஹெய்மும்

# நேற்று மாலை ஜனாதிபதியுடன் பேச்சு

## இன்று ரணிலையும் சந்திப்பர்

கொழும்பு,ஜூன்8

**ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் விசேட அழைப்பை ஏற்று நேற்றுக் கொழும்பு வந்து சேர்ந்த நோர்வேயின் வெளியுறவு அமைச்சர் த்ரொப்ஜோன் ஜக்லண்ட் மற்றும் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் நேற்று மாலை ஜனாதிபதி மாளிகைக்குச் சென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்தனர்.**

இச்சந்திப்பு சுமார் இரு மணி நேரம் நீடித்ததாகக் கூறப்பட்டது.

இந்தச் சந்திப்பில் ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் பங்குபற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் நோர்வேக் குழுவினர் இன்று சந்தித்துக் கலந்துரையாடுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை இந்தத் தடவை வன்னிப் பகுதிக்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் எதுவும் இல்லை என்று எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

நோர்வே தூதுக்குழுவினர் நேற்றுக் காலை கொழும்பு வந்து சேர்ந்த

(14 ஆம் பக்கம் பார்க்க)

### வெலிங்டன் சந்தியில் கிரனேட் வெடிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்8

யாழ்.நகரப் பகுதியிலுள்ள 512 ஆவது பிரிகேட் அலுவலகத்துக்கு (வெலிங்டன் தியேட்டர் சந்தி) அருகில் நேற்று அதிகாலை 'கிரனேட்' வெடிப்பு சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கிரனேட் வெடிப்பினால் பெரிய சேதங்கள் ஏதும் ஏற்பட்டதாகத் தெரியவரவில்லை.

நீண்ட நாள்களுக்குப் பின் நகரில் இத்தகைய கிரனேட் வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

### ஆஸ்பத்திரியில் சடலம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்8

விடத்தற்பளைப் பகுதியில் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவித்துப் படையினரால் ஆணின் சடலம் ஒன்று நேற்று மாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

அடையாளம் காணமுடியாதவாறு ஊதிப் பருத்த நிலையில் காணப்பட்ட இச் சடலம் வைத்தியசாலையின பிரேத அறையில வைக்கப்பட்டுள்ளது. கிளாலிப் பகுதியிலிருந்து இச்சடலம் எடுத்து வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

### தமிழ் எம்.பிக்கள் இன்று சந்திப்பு

கொழும்பு,ஜூன்8

இனப்பிரச்சினை விவகாரம் குறித்துத் தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கலந்துரையாடல் ஒன்றுக்கு தேசியத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், ஐ.தே.கட்சியின் எம்.பியுமான எம்.எஸ். செல்லச்சாமி அழைப்பு விடுத்துள்ளார்.

இன்று பிற்பகல் 2 மணிக்கு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தடையை நீக்கிப் பேச்சு நடத்துவதே பிரச்சினையைத் தீர்க்கச் சிறந்த வழி

### 31 பொது அமைப்புகள் கூடி ஜனாதிபதிக்கு மகஜர்

கொழும்பு,ஜூன்8

விடுதலைப் புலிகள் மீதான தடையை உடனடியாக நீக்கி, பேச்சு நடத்துவதே இனப்பிரச்சினையைத் தீர்க்கச் சிறந்த வழி.

- இவ்வாறு, அரச சார்பற்ற நிறுவனங்கள், மனித உரிமை அமைப்புகள மற்றும் சமாதானத்துக்கு ஊக்கமளிக்கும் அமைப்புகள் ஆகிய 31 அமைப்புகளின் சம்மேளனம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் நேற்றுக் கையளித்த மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

மேலும் அந்த மகஜரில் -

இனப்பிரச்சினையைத் தீர்த்து, சமாதானத்தை ஏற்படுத்துவதற்குச் சர்வதேச சமூகம் அழுத்தங் கொடுத்து முயற்சி எடுத்து வருகிறது. ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்டுள்ளமை அத்தகைய முயற்சிகளுக்குத் தடைக்கல்லாக உள்ளது.

ஆகவே புலிகள் மீதான தடையை

(14 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மீனவர் - கடற்றொழில் அமைச்சர் நேற்றைய சந்திப்பில் பலன் அதிகமில்லை

கொழும்பு,ஜூன்8

யாழ்.குடாநாட்டிலிருந்து கொழும்பு சென்றிருந்த கடற்றொழிலாளர் சங்கங்களின் 53 பிரதிநிதிகள், நேற்று கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் மகிந்த ராஜபக்ஷவுடன் நடத்திய பேச்சுக்களில் எதிர்பார்த்த பலன் ஏதும் கிட்டவில்லை என கடற்றொழிலாளர் சம்மேளன வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுக் காலை 11.00 மணிககு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்ற அமைச்சருடனான இந்தச் சந்திப்பை வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள், இந்து கலாசார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாடு செய்திருந்தார்.

குடாநாட்டில் மீன்பிடிக்க அனும

(14 ஆம் பக்கம் பார்க்க)

### அவசரகாலம் நீடிப்பு

கொழும்பு,ஜூன்8

அவசரகாலச் சட்டத்தை மேலும ஒரு மாதத்துக்கு நீடிக்கும் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் ஏழு மேலதிக வாக்குகளால் நிறைவேறியது. சட்ட நீடிப்புக்கு ஆதரவாக 111 வாக்குகளும் எதிராக 104 வாக்குகளும் கிடைத்தன. (உ-ஒ)

### திருமலையில் தாக்குதல்

கொழும்பு,ஜூன்8

திருகோணமலை மாவட்டம் கந்தளாயிலிருந்து 30 கிலோ மீற்றர் கிழக்கே உள்ள அலிஒறுவ என்ற இடத்தில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்று வெளியிட்ட களநிலைவர அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் -

திருகோணமலைக்குத் தென்கிழக்கே 30 கிலோ மீற்றர் தொலைவில் சேருவில பிரதேசத்தில் உள்ள

(14 ஆம் பக்கம் பார்க்க)

### சிப்பாய்கள் காயம்

கொழும்பு,ஜூன்8

வெலிஓயா பிரதேசத்தில் ஜானகபுரவில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற மோதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகவும் -

கிளாலிப் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் படையினர் இருவர் காயமடைந்ததாகவும் -

கள நிலைவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-ஒ)

# கேரதீவு ஊடான தரைவழிப் பாதையை திறப்பதற்குக் கோருகின்றார் யாழ்.ஆயர்!

## தலைவர் பிரபாகரனுக்கு அவர் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூன்8

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மற்றும் ஐ.நா. அமைப்புகளின் உதவியுடன் கேரதீவு - சங்குப்பிட்டி தரை



வழிப் பாதையைத் திறப்பதற்கு முயற்சி எடுங்கள்.

- இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைக் கோரியிருக்கின்றார் யாழ்.ஆயர் வண.தோமஸ் சௌந்தரநாயகம்.

புதுக்குடியிருப்பு சூசையப்பர் ஆலயத்தில் கடந்த மாத இறுதியில் இடம்பெற்ற - குருப் பட்டம் வழங்கும - நிகழ்வில் கலந்துகொள்வதற்காக வன்னிக்குச் சென்றிருந்த ஆயர் மேற்படி கோரிக்கை அடங்கிய தமது கடிதத்தை அங்கு வைத்துப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பி வைத்தார்.

அந்தக் கடிதத்தில் ஆயர் குறிப்பிட்டிருந்ததாவது:-

"நீண்டகாலமாக எமது தமிழ்மக்கள் இம்மண்ணில் அனுபவிக்கும் வேதனைகளைக் கண்டு, நோர்வே நாட்டு அனுசரணையுடன் சமாதானப பேச்சுகளை முன்னெடுத்துச் செல்ல நீங்கள் (புலிகளின் தலைவர்) நல்லிணக்கம் காட்டியது பெருமைக்குரியது; பாராட்டுக்குரியது; மகிழ்ச்சிக்குரியது.

இம்முயற்சி பௌத்த - சிங்கள எதிர்ப்புகளுக்கு மத்தியில், பின்னடைவின்றி, முன்னேற வேண்டும் என்பதே எமது நாளாந்த இறை வேண்டுதலாகும்.

இந்தத் தருணத்தில் ஒரு தேவையான விடயத்தை உங்கள் முன்னிலையில் கவனத்துக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

கடந்த 6 வருடங்களுக்கு மேலாக யாழ்.மக்களாகிய நாம் தரைவழிப் பாதை இன்றி, வன்னியில் இருந்து துண்டிக்கப்பட்டவர்களாக வாழ்ந்து கொண்டு இருக்கிறோம்.

வன்னியில் வாழும் எம் உடன் பிறப்புக்களோடு எவ்வித உறவும் அற்றவர்களாக - அவர்களை மறந்து வாழ வேண்டிய - துர்ப்பாக்கிய நிலையில் உள்ளோம்.

இப்போது தென்மராட்சியையும் இழந்தவர்களாகி, குடாநாட்டின் ஒரு சிறுபகுதிக்குள்ளேயே அனைவரும் வாழ வேண்டிய இக்கட்டான சூழ்நிலை. இது எங்கள் துன்பங்களை இன்னும் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் -

வன்னி வாழ் மக்களுடனான எமது உறவுகளை மீண்டும் ஏற்படுத்தவும், சிதைந்து போன எமது பொருளாதாரத்தை மேம்படுத்தவும், மிக அவசியமான தரைவழிப் பாதையைத திறந்து, அமைத்துத் தரும்படி தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

குறிப்பாகக் கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மற்றும் ஐ.நா. அமைப்புகள் ஆகியவற்றின் உதவியுடன் மீண்டும் போக்குவரத்துக்குத் திறந்து வைப்பதற்கு முயற்சி எடுங்கள்.



சமாதானத்துக்கான பேச்சுகளை நடத்துவதற்குத் தாங்கள் நல்லிணக்கம் காட்டியுள்ள இத்தருணத்தில், மேற்கூறிய தரைவழிப் பாதையை

(14 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

அரசசேவை, பொலிஸ், தேர்தல், நீதி நிர்வாகம் சம்பந்தமான

# சுதந்திர ஆணைக்குழுக்களை ஆதரித்தால்தான் சமாதானப் பேச்சுக்களை ஐ.தே.கட்சி ஆதரிக்கும்

## அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன்8

அரசசேவை, பொலிஸ், தேர்தல், நீதி - நிர்வாகம் ஆகியவை தொடர்பாக ஐ.தே.கட்சி பிரேரித்துள்ள நான்கு சுதந்திர ஆணைக்குழுக்களுக்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு தரும் ஆதரவைப் பொறுத்தே, அரசு - புலிகள் சமாதானப் பேச்சுக்களுக்கான ஐ.தே.கட்சியின் ஆதரவும் இருக்கும் என்று ஐ.தே.க.வின் அதிகாரபூர்வ வட்டாரம் தெரிவித்துள்ளது.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்களுக்கு ஆதரவாக செயற்படுவோம் என்று எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தமிழ் நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்தித்து உறுதியளித்ததாகப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் பற்றிக் குறிப்பிட்ட அந்த வட்டாரம், அரசுக்கும் புலிகளுக்கும் இடையே சமாதான முயற்சிகளில் ஏற்பட்டிருக்கும் பொது உடன்பாட்டை முழுமையாக ஐ.தே.க. ஆதரிப்பதற்குப் பதிலாக, அரசு நான்கு சுதந்திர ஆணைக்குழுக்களையும் அமைக்கும் யோசனைக்கு ஆதரவு தரவேண்டும் என்று வலியுறுத்தியது.

ஐ.தே.க. தலைவர் ரணில் ஏப்ரல் மூன்றாம் வாரத்தில் ஒஸ்லோவில் நடத்திய பேச்சுக்களிலும் இதனை வலியுறுத்தியிருந்தார். ஒஸ்லோவிலிருந்து நாடு திரும்பிய பின்னர் கட்சி வெளியிட்ட செய்தி வெளியீட்டில் "அரசாங்கம் ஐ.தே.கவின் கோரிக்கைகளைப் பிடிவாதமாக புறக்கணித்து விடுமாயின் அரசுக்குத் தரும் ஆதரவைக் கட்சி மறுபரிசீலனை செய்யும்" எனவும் தெரிவித்திருந்தது.

ஐ.தே.க. தலைவரும், அவருடன் சென்றிருந்த ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்த மொரக்கொடவும் இந்தியத் தலைவர்களைச் சந்தித்த பின்பு நாடு திரும்பியுள்ளனர். (உ)

### மிதிவெடியில் படுகாயம்

வவுனியா,ஜூன்8

மிதிவெடியில் சிக்குண்ட இளைஞன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்

பரந்தன், முரசுமோட்டையைச் சேர்ந்த வேலாயுதம் குமார்(வயது15) என்ற இளைஞனே இவ்வாறு படுகாயமடைந்தான்.

மல்லாவி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவ் இளைஞன் மேலதிக சிகிச்சைக்காகத் தற்பொழுது வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். (உ-10)

### சடலம் மீட்பு

திருகோணமலை,ஜூன்8

இனந்தெரியாத இளைஞர் ஒருவரின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் திருகோணமலை செல்வநாயகபுரம் பகுதியில் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

தற்பொழுது அடையாளம் காணும பொருட்டு சடலம் திருகோணமலை அரசினர் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (உ-10)

# தற்கொலை புரிவோர் எண்ணிக்கை யாழ்.குடாநாட்டில் திடீர் அதிகரிப்பு

## வறுமை நிலையே பிரதான காரணம்

யாழ்ப்பாணம்,ஜூன்8

யாழ்.குடாநாட்டில் கடந்த சில ஆண்டுகளாகத் தற்கொலை செய்து கொள்வோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக யாழ்போதனா வைத்தியசாலைப் பதிவேடுகளில் இருந்து தெரியவருகிறது.

வறுமை நிலை காரணமாகவே தற்கொலை செய்வோர் எண்ணிக்கை அதிகரித்துவருவதாகத் தற்கொலை செய்துகொண்டவர்களின் மரண விசாரணைகளில் இருந்து தெரியவருவதாக யாழ்ப்பாணம் திடீர் மரண விசாரணை அதிகாரி ரி.ஜெயரட்ணம் தெரிவித்தார்.

கடந்த சில ஆண்டுகளில் மாதாந்தம் பத்துத் தற்கொலைகள் என்ற ரீதியில் இந்த அதிகரிப்புக் காணப்படுவதாகவும் அவர் சொன்னார்.

இந்த ஆண்டின் கடந்த 5 மாத காலப் பகுதியில் மட்டும் 30 தற்கொலை மரணங்கள் நிகழ்ந்துள்ளன என்று ஆஸ்பத்திரிப் பதிவேடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்கொலை மரணங்களில அதிகமானவை அலரிக்கொட்டை அருந்துவதன் மூலமே நிகழ்கின்றன. இளம் பெண்கள், குடும்பஸ்தர்கள் உட்பட எல்லா வயதினரும் தற்போது தற்கொலை செய்கின்றனர். வறுமை காரணமாகவே பலர் தற்கொலை செய்துள்ளனர் என்பதை விசாரணைகளில் இருந்து அறியமுடிகிறது.

- இவ்வாறு திடீர் மரண விசாரணை அதிகாரி மேலும் கூறினார். (ம-5)

# ஆங்கில மொழி மூலக் கல்வியை எதிர்த்து கையெழுத்து இயக்கம்

## களனி பல்கலை மாணவர் சிலர் கைது

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகள் உள்ள சில பாடசாலைகளில் ஆங்கில மொழி மூலக் கல்வியை அறிமுகப்படுத்தும் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகப் பாடசாலை மாணவர்களிடம் கையொப்பங்களைச் சேகரித்த களனிப் பல்கலைக் கழக மாணவர்கள் சிலர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கையொப்பங்களைச் சேகரிக்கும் நடவடிக்கை கம்பஹா மாவட்டத்தில் உள்ள பிரபல மகளிர் பாடசாலைகளில் நேற்று முன்தினம் ஆரம்பமாகிய போதும் கல்லூரி நிர்வாகத்தினர் இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

இதனையடுத்து மேற்படி விடயம் கல்லூரி நிர்வாகத்தால் பொலீஸாருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் குறிப்பிட்ட பாடசாலைகளுக்குச் சென்று கையொப்ப வேட்டையில் ஈடுபட்ட சிலரைக் கைது செய்தனர். எனினும் விசாரணைகளின் பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இதேவேளை உயர் கல்வியை ஆங்கில மொழி மூலம் கற்பிப்பதால் பின்தங்கிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகள் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்கும் என்று அகில இலங்கைப் பல்கலைக்கழகங்களின் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (உ-10)

# பலாலியிலிருந்து இந்தியாவுக்கு நேரடி விமான சேவை நடத்துக!

## டக்ளஸிடம் இந்துப் பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்8

யாழ்ப்பாணத்திலுள்ள இந்து யாத்திரிகர்கள் இந்தியாவிற்கு யாத்திரை செய்து அங்குள்ள சிதம்பரம், காசி, போன்ற தெய்வீக ஸ்த்தலங்களுக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொள்வதற்கு வசதியாகப் பலாலியிலிருந்து இந்தியாவுக்கு நேரடி விமான சேவையொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்.

- அண்மையில் வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்த வடபிரதேச இந்துப் பேரவையினர் அமைச்சரிடம் மேற கண்டவாறு கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக வடபிரதேச இந்துப் பேரவையினர் அமைச்சரிடம் மகஜர் ஒன்றினையும் கையளித்துள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ள ஏனைய கோரிக்கைகள் வருமாறு:-

✪ ஏழை மக்களும் யாத்திரை சென்று வரக்கூடிய வகையிலும் அவர்களின் பாதுகாப்பை முன்னிட்டும் பருத்தித்துறை - கோடிக்கரை அல்லது காங்கேசன்துறை - தூத்துக்குடி கப்பற் சேவை ஆரம்பிக்கப்பட்டு வாரத்தில் சில நாள்களாவது நடத்தப்படுதல் வேண்டும்.

✪ இந்தியா செல்லும் இந்திய யாத்திரிகர்களின் நலன் கருதியும் எமது மக்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளை நெருக்கமாகப் பேணும் வகையிலும் 'விஸா' வழங்கும் வகையிலும் இந்தியத் தூதரகக்கிளை ஒன்றை கண்டியில் இருப்பது போன்று யாழ்ப்பாணத்திலும் திறக்க வேண்டும்.

✪ யாழ். மக்களின் நலன் கருதி 'பாஸ்போட்' வழங்கும் அலுவலகக் கிளையொன்று குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தால் யாழ். கச்சேரியிலும் திறக்கப்பட வேண்டும்.

இக்கோரிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார் எனவும் -

இந்த மகஜரின் பிரதிகள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இந்தியத்தூதரக அதிகாரிகள் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-4)

### சுட்டுக்கொலை

மட்டக்களப்பு,ஜூன்8

மட்டக்களப்பு - சம்மாந்துறைப் பகுதியில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நேற்றுக்காலை இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சம்மாந்துறை, கர்க்கா வீதியைச் சேர்ந்த அலியார் அப்துல் றகீம் என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

வீட்டிலிருந்து பொலீஸ் நிலையத்துக்குச் சென்றுகொண்டிருந்த போதே அவர் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். (உ-10)

# சட்டவிரோத கருச்சிதைவு செய்வித்த வயோதிப மாதுவுக்குத் தண்டனை

வலி.வடக்கு,ஜூன்8

இளம் பெண் ஒருவருக்கு சட்ட விரோதமான முறையில் கருச்சிதைவு செய்வித்தார் என்ற குற்றச்சாட்டை ஒப்புக்கொண்ட வயோதிபப் பெண் மணிக்கு 15 ஆயிரம் ரூபா அபராதமும் ஐந்து வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட மூன்று மாதக் கடுழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

அச்சுவேலியைச் சேர்ந்த இளம் பெண் ஒருவருக்கு சட்டவிரோதமான முறையில் கருச்சிதைவு செய்தார்கள் என்ற குற்றசசாட்டின் பேரில் புலோலியைச சேர்ந்த வயோதிப் பெண்ணான நல்லதம்பி இரத்தினம் (வயது 70) என்பவரையும் நெல்லியடியைச் சேர்ந்த வைரமுத்து பாலகிருஷ்ணன் என்பவரையும் மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் அச்சுவேலிப் பொலீஸார் ஆஜர் செய்தனர்.

நீதிமன்றத்தின் முன் எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து முதலாம் எதிரிக்கு மேற்படி தண்டனையை நீதிமன்றம் விதித்தது. இரண்டாம் எதிரிக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதி மன்றம் மேலும் 3 ஆயிரம் ரூபாவை மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவுக்கு வழங்கும்படியும் உத்தரவிட்டது. (உ-86)

# யாழ்.நகர் மையப் பகுதியில் நேற்று சுற்றிவளைப்பு, தேடுதல்

யாழ்ப்பாணம்,ஜூன்8

யாழ்நகரப் பகுதியை நேற்று முற்பகல் 11 மணிக்கு சுற்றி வளைத்த படையினர் நகரிலிருந்து வெளியேறியவர்களையும், உள்ளே சென்றவர்களையும் தீவிரமாகச் சோதனைக்கு உட்படுத்தினர்.

சுமார் 2 மணி நேரம் இந்தச் சோதனை நடவடிக்கைகள் நீடித்தன.

அடையாள அட்டைகள் பரிசீலிக்கப்பட்டதுடன் ஆள்கள் உடறசோதனைக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

நகரப் பகுதிக்கு வந்த சகல வாகனங்களும் நிறுத்தப்பட்டு அதில் பயணம் செய்தவர்கள் இறக்கப்பட்டு சோதிக்கப்பட்டனர். வாகனங்களின் உளளேயும் துருவித்துருவி சோதனையிடப்பட்டது.

மாநகரசபையின் குப்பைகள் ஏற்றும் வண்டில்களும் சோதனைக்குத் தப்பவில்லை.

அவற்றில் ஏற்றப்பட்டிருந்த கழிவுகளும் கம்பிகளினால் குத்திச் சோதிககப்பட்டன.

512ஆவது பிரிகேட்டின முன்பாக (வெலிங்டன் சந்தி) உள்ள சந்தி, ஸ்ரான்லி வீதி - கஸ்தூரியார் வீதிச் சந்தி (லிடோ தியேட்டரடி), நகரிலுள்ள மினிபஸ் தரிப்பிடப்பகுதி உட்படப் பல இடங்களில் படையினர் குவிக்கப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

படையினரின் திடீர் சோதனை நடவடிக்கையினால் நகரப் பகுதியில் பதற்றம் நிலவியது. (உ-5-15)


பரிசளிப்பு

நல்லூர் சயன்ஸ் அக்கடமியின் மாதாந்தப் பரீட்சைக்கான பரிசளிப்பும், கணிப்பீட்டறிக்கை வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 10.06.2001 அன்று காலை 10.30 மணிக்குப் பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

பிரதமவிருந்தினர்:- கலாநிதி எஸ்.குகசை ஆனந்தன் அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர் - புவியியற்துறை, இணைப்பாளர் - கடல்வளத்துறை டிப்ளோமா, யாழ்.பல்கலைக்கழகம்)

பெற்றோர்கள் அனைவரும் கலந்துகொள்ளவும்.

(88817) இ.ஜெயக்குமார், இயக்குநர்.



உ

திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருஷம் வைகாசித் திங்கள் 28 ஆம் நாள் (10-06-2001)
ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிமுதல் நண்பகல் 12.00 மணி வரையிலுள்ள
திருவோண நட்சத்திரமும், அமிர்தயோகமும் கூடிய கடகலக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்

திரு.திருமதி முருகேசு தம்பதியினரின்
கனிஷ்ட புதல்வன்
திருநிறை செல்வன்
காளிதாசன் (தாசன்)
அவர்களுக்கும்



திரு.திருமதி நடராசா தம்பதியினரின்
செல்வப் புதல்வி
திருநிறை செல்வி
ஜெயலஷ்மி (ஜெயா)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் சுற்றஞ்சூழச் சமுகம் தந்து புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து இடம்பெறும் விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமணம் நடைபெறும் மண்டபம்:-
உயர்வாசற்குன்று முருகன் ஆலயக் கல்யாண மண்டபம்
200A, Archway road,
London N6 5BA.

தங்கள் அனைவரதும் நல்வரவை நாடும்

திரு.திருமதி முருகேசு,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

திரு.திருமதி K.V.நடராஜா,
உபாத்தியாயர் வளவு,
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(C/17036) (இருவீட்டார் அழைப்பு)

# உதயன்

## நியாயமான கோரிக்கை

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளில் சேவையாற்றும் மருத்துவ அதிகாரிகள் - டாக்டர்கள் - இன்னும் இரண்டு நாள்களில், திங்கட்கிழமை தொடக்கம் வேலைநிறுத்தம் செய்யவுள்ளார்கள். அதற்கான முன்னறிவித்தலை விடுத்துள்ளார்கள்.

தமிழ்ப் பிரதேசங்களின் நோயாளர்களின் - மக்களின் - நலன் கருதியே தாம் இத்தகைய போராட்டத்தை இதுவரை தவிர்த்து வந்ததாகவும், கோரிக்கையை வென்றெடுக்க வேறு வழி இல்லாததால் இப்போது அதனை நாடியிருப்பதாகவும் மருத்துவ அதிகாரிகள் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு வந்து கடமையாற்றிய, கடமையாற்றும் தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மை இன மருத்துவ அதிகாரிகளுக்கு விசேட மேலதிக கொடுப்பனவு (Special Mission Allowance) வழங்கப்பட்டது; இப்போதும் வழங்கப்படுகிறது.

கடந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் வழங்கப்பட்டு வரும் இந்த விசேட கொடுப்பனவு, தமக்கும் தரப்படவேண்டும் என்று தமிழ்ப் பிரதேசங்களில் சேவையாற்றும் தமிழ் பேசும் மருத்துவ அதிகாரிகள் ஆரம்பத்திலேயே கோரிக்கை விடுத்தனர்.

கடந்த ஒன்றரை வருடங்களாக இவர்களின் கோரிக்கையை - சுகாதார அமைச்சு - அரசாங்கம் - உதாசீனம் செய்து வருகிறது. அமைச்சரவை இந்தக் கோரிக்கையை நிராகரித்துவிட்டமை பெரும் கண்டனத்திற்கு உரியதும் அதிர்ச்சி தருவதும் ஆகும். முழுக்க முழுக்க இனப் பாகுபாட்டின் அடிப்படையிலேயே அரசாங்கம் இவ்வாறு பாரபட்சமாகச் செயற்படுகிறது என்பது மிகவும் வெளிச்சம்.

தென்னிலங்கை மருத்துவர்கள் தமிழ்ப் பிரதேசங்களில் குறைந்த காலத்திற்குச் சேவையாற்றிவிட்டுப் போய் விடுகிறார்கள். பின்னர் அவர்களின் இடங்களுக்கு வேறு மருத்துவர்களை அனுப்புகிறார்கள்.

ஆனால் தமிழ் பேசும் மருத்துவர்கள் அவ்வாறல்ல. பலப்பல தட்டுப்பாடுகள், பற்றாக்குறைகள், வசதிக் குறைவுகள் என்பவற்றுக்கு மத்தியிலும் தமது மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற உணர்வுடன் பணி புரிபவர்கள்.

போரினால் அழிந்து கொண்டிருக்கும் எமது மக்களை, சுகாதார சேவையின் தட்டுப்பாடுகள், இல்லாமைகளின் மத்தியிலும் உயிரிழப்புக்கள், பாரிய பாதிப்புக்களில் இருந்து காக்கும் அரும்பெரும் வேலையை அவர்கள் செய்து வருகிறார்கள்.

அவர்களது மதிப்பிடற்கரிய மருத்துவ சேவையை மக்களாகிய நாம் நன்கு அறிவோம்; அவர்களின் சேவையை நன்றியுடன் உணரவும் செய்கிறோம். ஆனால் அரசாங்கம் அவர்களினது நியாயமான கோரிக்கையை ஒரேயடியாக நிராகரித்து தமிழ் பேசும் மருத்துவர்களுக்கு பாகுபாடு காட்டுகிறது.

தமிழ் பேசும் மருத்துவ அதிகாரிகள் என்பதற்காக அரசாங்கம் அவர்களைப் புறக்கணித்து வருகிறது. ஒரே பணி செய்யும், ஒரே வகை ஆபத்துக்களை எதிர்நோக்கும் அல்லது கஷ்டங்களை அனுபவிக்கும் இரு தரப்பினர்களை இவ்வாறு பிரித்து அவர்களிடையே வேற்றுமை வளர்வதற்கு அரசாங்கம் உந்து சக்தியாக விளங்குகிறது.

இந்த லட்சணத்தில்தான், அரசாங்க அமைச்சர்களும் ஏனையோரும் தேசிய நல்லிணக்கம், ஒருமைப்பாடு, இன ஒற்றுமையை வளர்த்தல் என்ற "பெரிய சொற்களை" எழுத்திலும் பேச்சிலும் உச்சரித்து வருகிறார்கள்!

சிங்கள மக்களின் நலன்களில் உள்ள அதே அளவு அக்கறை, தமிழ் பேசும் மக்களின் நலன்களிலும் இருக்குமாயின் -

அரசாங்கம் தமிழ் மக்களுக்கான சுகாதார வசதிகள் குறையின்றிக் கிடைக்க வேண்டும் என்பதில் ஈடுபாடு உடையதாயின் -

தமிழ் மருத்துவர்களின் மிக நியாயமான மேற்படி கோரிக்கையை உடன் நிறைவேற்ற வேண்டும். செய்யுமா?

# கடித உறை தயாரிக்கும் தொழில் விஸ்தரிக்கப்படும்

வலிகாமம் தெற்கு, ஜூன்8

தாவடிக கிராமத்தைச் சூழ உள்ள பகுதிகளில் இடம்பெயர்ந்து வாழும் வறிய இளைஞர்கள், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பளித்து, பொருளாதார வளர்ச்சிக்கு உதவிடும் நோக்கத்துடன் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தினர் கடித உறைகள் தயாரிக்கும் முயற்சிக்கு நிதி உதவி வழங்கியுள்ளனர்.

தாவடி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினரால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வந்த குறைந்த அளவிலான கடித உறைகள் தயாரிக்கும் தொழிற்சாலையை விஸ்தரிக்கவும் -

கைத்தொழில் முயற்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்த இத்தொழிலை இயந்திர மயப்படுத்தி பெரிய அளவில் உற்பத்தியினை மேற்கொள்ளவும் -

இதன் மூலம் யாழ். குடாநாட்டு மக்களுக்குத் தேவையான கடித உறைகளை இங்கேயே பெற்றுக் கொள்ளவும் - வசதி ஏற்பட்டுள்ளது.

இதற்கென அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் சுமார் 4லட்சத்து 32 ஆயிரம் ரூபாவை வழங்கி உள்ளது.

ஏற்கனவே நான்கு பேருடன் இயங்கிவரும் இத் தொழிற்சாலை இந்நிதி உதவியின் மூலம் மேலும் பலருக்கு வேலைவாய்ப்பு வழங்க உள்ளது.

(ஐ-152)

# நாட்டு நடப்பு

'ரமில் டே - I'

பேரம் பல மாஸ்டர் வீட்டி லேன்ரி
பெடியள் பெரும் அமளியாய்க் கிடக்கு?
கரங்களில் வேட்டி மற்றும் கயிற்றோடு
காத்து நிற்கிறார்கள் கியூவில்
தமிழ்த்தினம் வருகுதென்று தெரிந்து
தம்பியர்க்கு வேட்டி கட்டப் பழக்கிறார் வாத்தி
அவிழ்ந்து விடுமோ என்று அஞ்சி எல்லோ
அடி வயிற்றில் கயிறு கட்டி விட்டா பாட்டி

*- விகடகவி.*

## தனித்திருப்பவர்களை விட

# திருமணம் செய்தோர் நீண்ட நாள் சுகதேகிகளாக வாழ்கின்றார்கள்

## 'அகவொளி' கருத்தரங்கில் வண.பிதா உரை

யாழ்ப்பாணம்,ஜூன்8

திருமணம் செய்தவர்கள் தனித்திருப்பவர்களைவிட நீண்டகாலத்துக்கு சுகதேகிகளாக வாழ்வதாக மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

- இவ்வாறு அகவொளி இயக்குநர் வண.பிதா எஸ்.ஜே.இராஜநாயகம் தெரிவித்தார்.

'அகவொளி' நிலையத்தினால் நடத்தப்பட்ட முழுநிலா நாள் கருத்தரங்கில் 'திருமணம் உளவியல் ரீதியில் நன்மை பயக்கின்றதா?' என்ற தலைப்பில் நடைபெற்ற அநுபவப் பகிர்வில் கலந்து கொண்டு ஆய்வுரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

உளவளத்துணையாளர் எஸ்.இராஜேந்திரம் மற்றும் திருமதி எஸ்.இராஜேந்திரம் ஆகியோர் இது தொடர்பான தமது அனுபவப் பகிர்வினை வழங்கினார்கள்.

வண.பிதா எஸ்.ஜே.இராஜநாயகம் அங்கு மேலும் கூறியதாவது:-

திருமணம் செய்து குழந்தைகளைப் பெற்றவர்களே நீண்டகாலத்துக்கு நல்ல ஆரோக்கியம் உள்ளவர்களாக இருப்பதாக அண்மையில் இங்கிலாந்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

திருமணமானவர்கள் மற்றவர்களை விட உடல் நலத்துடனும் மகிழ்ச்சியாகவும் இருக்கிறார்கள் என்று அந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமணத்துக்கு முன் வாடிவதங்கி இருப்பவர்கள் திருமணம் செய்த பின்னர் நன்றாகப் பருத்து மகிழ்ச்சியாக இருப்பதனை நாம் இன்று நேரிலே காண்கின்றோம்.

திருமணம் செய்யாதவர்கள் நோய், இயலாமை போன்றவற்றால் தாக்கப்படுவதுடன் மனநலம் பாதிக்கப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். திருமணமாகாதவர்களிலே குறிப்பிட்ட வயதெல்லைக்குள் இறப்பு வீதமும் அதிகமாக இருக்கிறது.

ஏற்கனவே நோயினால் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் திருமணம் செய்த பின்னர் நோய் குறைந்து சுகதேகிகளாகக் காணப்படுகின்றனர். இத்தகையவர்களில் சிலருக்கு திருமணத்தின் பின் நோய் மேலும் கூடிக் காணப்படுவதும் உண்டு. இவை விதிவிலக்கானவை.

திருமணம் செய்தவர்கள் அவர்களுடைய வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்கிறார்கள். அதாவது திருமணம் அவர்களை மாற்றி விடுகிறது. இதனால் திருமணம் செய்தவர்கள் நன்மை அடைகின்றனர்.

குடிபோதை உட்படப் பல தீய பழக்கவழக்கங்களை திருமணம் கட்டுப்படுத்துகிறது. திருமண வாழ்க்கையில் ஓர் அர்த்தம் இருக்கிறது. மனைவி, பிள்ளைகள், சமூகம் போன்றவற்றுக்காக வாழவேண்டிய உணர்வினை திருமணம் செய்தவர்கள் உணர்ந்து கொண்டு நிறைவாக வாழ்கின்றனர்.

விவாகரத்துச் செய்தவர்கள், விதவைகள் மற்றும் தனித்திருப்பவர்கள் தம் சுகநலத்துக்கு எதிராக நடந்து கொள்கின்றனர் என்றே கருதப்படுகிறது.

புற்றுநோய், இருதயநோய் மற்றும் இரத்த அழுத்தம் போன்றவற்றினால் திருமணமாகாதவர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

திருமணம் நல்ல உடல் நலத்தை தருவது போல் உள நலத்தையும் தருகிறது. மனநலம் பாதிக்கப்பட்டவர்கள் கூட திருமணம் செய்யும் போது அதிலிருந்து விடுபடுகிறார்கள்.

மகளிர் அமைப்புக்கள் சில திருமணம் முடிப்பதனால் ஆண்கள்தான் நன்மை அடைகிறார்கள் என்று குற்றம் சாட்டி வருகின்றன. ஆனால் ஆய்வுகளின்படி திருமணத்தினால் ஆண், பெண் இருவருமே நன்மை அடைகினறனர் என்று தெரியவருகிறது.

1987 ஆம் ஆண்டு டாக்டர் அம்புசன் நடத்திய ஆய்வில் திருமணமும பிள்ளை வளர்த்தலும் ஒரு குடும்பத்துக்கு நல்ல வளத்தை கொடுக்கிறது - என்று தெரிவித்துள்ளார்.

தாய் தந்தையர் திருமணம் செய்து கொள்ளும் முன்பு பிறக்கும் குழந்தைகள் நிறை குறைவாகக் காணப்படுகின்றன. இதனால் குழந்தைகளின் இறப்பு வீதமும் அதிகரித்து காணப்படுகிறது.

பெற்றோரின் விவாகரத்து குழந்தைகளின் மனநலத்தை பாதிக்கின்றது. இதனால் பிள்ளைகளுக்கு இதய வருத்தமும் ஏற்படுகின்றது.

திருமணமாகாது இருக்கும் பெண்கள் தலையிடி, நாரிஉளைவு, வயிற்றுவலி உட்படப் பல நோய்களினால் பாதிக்கப்படுகிறார்கள். அதே சமயம் திருமணம் செய்த எல்லோருமே நிறைவான மகிழ்ச்சியைக் காண்கின்றார்கள் - என்றும் அவர் கூறினார்.

(ம-5)

## சஞ்சிகை வெளியீடு

வவுனியா,ஜூன்8

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் முகாமைத்துவமும் கணக்கியலும் ஒன்றியத்தின் 'த எக்ஸ்ஸிகியூடிவ்' என்னும் சஞ்சிகையின் வெளியீட்டு விழா வவுனியா காமினி மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு, ஒன்றியத் தலைவர் சி.எஸ்.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

வவுனியா வளாக முதல்வர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஐ-164)

## மாணவர் திறன் கண்காட்சி

அச்சுவேலி,ஜூன்8

'புத்துலகிற்கான பாதை' என்ற தலைப்பில் மாணவர் திறன் கண்காட்சி பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்டு தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் வலய மட்டத்தில் காட்சிப் படுத்தப்படவுள்ளன.

யாழ். கல்வி வலயப் பாடசாலைகள் மட்டத்திலான கண்காட்சி இம் மாதம் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 23ஆம் திகதி சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது. (ஐ-11)

## தரம் 10, 11 மாணவர்களுக்கு

# வணிகக் கல்வியும் கணக்கீடும் பாடநூல் வழங்கப்படவில்லை

வலிகாமம்தெற்கு,ஜூன்8

புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கு அமைய திருத்தி அமைக்கப்பட்ட பாடநூல்களில் தரம் 10, தரம் 11 மாணவர்களுக்கான வணிகக் கல்வியும் கணக்கீடும் பாடத்துக்கான பாடநூல் இதுவரையும் பாடநூல் வெளியீட்டுத் திணைக்களத்தால் வழங்கப்படவில்லை.

கடந்தவருடம் தரம் 10 இல் ஆரம்பமான புதிய கல்விச் சீர்திருத்தங்களுக்கமைந்த பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதிலும் மாணவர்கள் மேற்படி பாடத்தை துணையாகக் கொண்டு கற்கக் கூடிய பாடநூல்கள் இதுவரை அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

எதிர்வரும் டிசெம்பரில் நடைபெற உள்ள பொதுப் பரீட்சைக்குத் தயாராக வேண்டிய நிலையில் தற்போது தரம்11 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு உரிய பாடநூல்கள் வழங்கப்படாமையால் அவர்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளார்கள்.

இப்பாடம் சம்பந்தமாக தனியாரால் எழுதப்பட்ட சில பாடநூல்கள் வெளிவந்துள்ள போதிலும் பரீட்சைக்கு இந்நூல்கள் எந்தளவுக்குப் பயன்படும் என்ற நிச்சயமில்லாத நிலையில், பல ஆசிரியர்கள் அவற்றைப் பயன்படுத்திக் கற்பித்தலை மேற்கொண்டு வருகின்றனர்.

நூல்களின் விலை அதிகமாக இருப்பதால் மாணவர்கள் இந்நூல்களைத் தனித்தனியாக வாங்கி உபயோகிக்க முடியாத நிலையில் உள்ளனர்.

இவ்வருடத்துக்கான இறுதிப் பாடநூல் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு முடிவடைந்தபோதிலும் கடந்த இரண்டு ஆண்டுகளாக வணிகக் கல்வியும் கணக்கீடும் நூல் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-152)

# சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் தமிழ் மொழி பேசும் உத்தியோகத்தர்கள்

## மக்களின் முறைப்பாட்டை அடுத்து நியமனம்

சுன்னாகம்,ஜூன்8

சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் தமிழ் மொழி பேசும் மூன்று உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, விசாரணைகளில் ஏற்பட்ட தாமதங்கள் நீக்கப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் தமிழ் பேசும உத்தியோகத்தர்கள் இல்லாமையால விசாரணைகளுக்கு வருபவர்கள் திருப்பியனுப்பப்பட்டும், விசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டும் வந்ததாகப் பொதுமக்கள் புகார் தெரிவித்திருந்தனர்.

தற்போது புதிதாகப் பதவியேற்றுள்ள பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித பெனான்டோ கடந்த காலக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

(ஐ-27)

## நாளை

வைகாசி 26
சனிக்கிழமை
திதி: திருதியை
முற்பகல் 10.37 வரை
நட்சத்திரம்: உத்தராடம்
வைகறை 5.09 வரை.
சங்கடஹர சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 2.52 - 4.22
ராகுகாலம் : 8.52 - 10.22
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

..உன்னை ஒருவன் இரு முறை ஏமாற்றினால் அது உன்னுயைடய குற்றம்.

## கண்ணிகள் காத்திருக்கின்றன, கவனம்!

கால் நடைகளும் எம்மவர்க்குப் பெரும் சொத்துத்தான். என்ன செய்வது, அவிழ்த்து விட்ட மாடு மிதிவெடிகள் இருக்கும் பகுதிக்குள் போய் விட்டது. அதனைப் பிடிக்கப்போவது உனக்கும் ஆபத்தாகிவிடும். மிதிவெடி ஆபத்துக் குறித்து எப்போதும் மனதிற் கொள்ளுங்கள்!



# சிறையில் உள்ள இந்திய மீனவரை விடுவிக்க ஜனாதிபதிக்குக் கடிதம்

## கூட்டணி ஆனந்தசங்கரி கோரிக்கை

கொழும்பு, ஜூன் 8

கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 37 இந்திய மீனவர்களையும் விடுதலை செய்யுமாறு யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக்கூட்டணியின் சிரேஷ்ட துணைத் தலைவருமான வீ. ஆனந்தசங்கரி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

யாழ்ப்பாணத்தில் சிறை வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை மே 15 ஆம், 13 ஆம் திகதிகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரோடும், யாழ். மாநகர சபை உறுப்பினர்கள் இருவரோடும் சென்று பார்வையிட்டேன். நெருக்கடி மிக்க சிறிய அறைகளில் மாற்றுத்துணிகூட வழங்கப்படாத நிலையில் உள்ளூர் விசாரணைக் கைதிகளோடு இவர்கள் சேர்த்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களிடையே சிறுவர்களும் உள்ளனர்.

21 அடி நீளமும் 12 அடி அகலமும் உள்ள அறையில் 30 கைதிகள் உள்ளனர். இதே யளவு இன்னொரு அறையில் 31 கைதிகள் உள்ளனர். இவர்களை அடைத்து வைத்துள்ள அறைகளில் முறையான சுகாதார வசதிகள் கூட இல்லை.

எழுபதுகளின் ஆரம்பத்தில் தமிழ்நாட்டு அரசியல்வாதிகளினதும் மீனவர்களினதும் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் இந்தியப் பிரதமராக இருந்த திருமதி இந்திராகாந்தி கச்சதீவை இலங்கைக்குக்கையளித்தார்.

இதற்கெதிராக, இராமநாதபுர மகாராஜா சட்டநடவடிக்கை எடுக்கப்போவதாகக் கூறியபோதும் இந்தியப் பிரதமர் தனது தீர்மானத்தில் உறுதியாக இருந்தார்.

கச்சதீவு கைமாறியதால் இந்திய மீனவர்கள் தமது ஜீவனோபாயத்தை இழந்தனர். இலங்கையும், இந்தியாவும் மிக நெருக்கமாக இருப்பதும் நடுக்கடலில் கச்சதீவு, நெடுந்தீவு ஆகியன அமைந்திருப்பதும் நிலைமைகளைச் சிக்கலாக்கியுள்ளன. கல்வியறிவற்ற மீனவர்கள் கடல் எல்லைக் கோடுகளை அறிந்திருப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

கச்சதீவை மீண்டும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற இலங்கை அரசின் நடவடிக்கைகளே காரணமாகியுள்ளன. கடந்த காலங்களில் எண்ணற்ற இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலுக்குப் பலியாகியுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என வலியுறுத்திக் கேட்கிறேன். சிறையிலுள்ள மீனவர்களின் குடும்பங்கள் மிகவும் கஷ்டப்படுவதாக எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. சிறை வைக்கப்பட்டுள்ள மீனவர்களின் விவரப் பட்டியலை இத்துடன் இணைத்துள்ளேன் எனவும் தெரிவித்துள்ளார். (ஐ)

## நாடகப் போட்டி

யாழ். கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான சிறுவர் நாடகப் போட்டி நாளை சனிக்கிழமை வைத்தீஸ்வராக் கல்லூரியில் நடைபெறும்.

தமிழ்மொழிக்கலைத் திறன் போட்டிகளில் இந்த வருடம் சிறப்பு நிகழ்வாக சிறுவர் நாடகப் போட்டி நடைபெறவுள்ளது. (ம-11)

# 'கற்பகம்' நிலையங்களில் பதநீர் அமோக விற்பனை!

யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச்சபையால் நடத்தப்பட்டு வரும் 'கற்பகம்' பனம்பொருள் விற்பனை நிலையங்களில் இம்மாதம் முதல் போத்தலில் அடைக்கப்பட்ட பதநீர் (கருப்பணி) விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

குளிரூட்டப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வரும் இந்தப் பதநீர் ஏனைய மென் பானங்களுக்குப் போட்டியாக விற்பனையாகிக் கொண்டிருப்பதாகப் பனை அபிவிருத்திச் சபையின் விற்பனை முகாமையாளர் எஸ். புவனேசமூர்த்தி தெரிவித்தார்.

இந்தப் பதநீர் மென்பான விற்பனை பூரண வெற்றியளிக்குமிடத்து சீவல் தொழிலாளர்கள் மிகுந்த நன்மையடைவார்கள் எனவும்—

விரைவில் பதநீரை 'பைக்கற்' றில் அடைத்து விற்பனைக்கு விடுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# மக்களின் எதிர்ப்பை அடுத்து கள்ளுத் தவறணை மூடப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 8

பொதுமக்கள் கொடுத்த அழுத்தத்தைத் தொடர்ந்து கடுக்காய்டி, நாயன்மார் வீதி, நல்லூரிலுள்ள் கள்ளுத் தவறணை மூடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வாழும் பகுதியில் இந்தக் கள்ளுத் தவறணை இயங்கியதால் அங்குள்ள மக்களுக்கு பெரும் அசௌகரியங்கள் ஏற்பட்டன.

மாலை நேரங்களில் இந்தப் பகுதியில் மது பாவனையாளர்களின் நடவடிக்கையினால் மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாத நிலை ஏற்பட்டதுடன் பொதுமக்களும் நிம்மதியாக வசிக்க முடியாத நிலையும் ஏற்பட்டது.

சிலநேரங்களில் மது அருந்த வருபவர்கள் பொதுமக்களின் வீடுகள் மீது கற்களை வீசி வந்ததாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

மதுபாவனையாளர்களின் அடாவடித்தனங்கள் எல்லை மீறிச் சென்றதைத் தொடர்ந்து இப்பகுதி மக்கள் ஒன்றிணைந்து மேற்படி கள்ளுத்தவறணையை மூடிவிடுமாறுகோரிமறியல்போராட்டம் நடத்தினர்.

இதுதொடர்பாக பல மட்டங்களுடன் இவர்கள் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து இந்தக் கள்ளுத் தவறணை மூடப்பட்டு வேறிடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (ம-5)


யாழ்ப்பாணம்

வண்ணார்பண்ணை காட்டுத்துறை

**அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோவில்**

**மஹோற்சவம் - 2001**

விசேட உற்சவ விவரம்

11 - 06 - 2001 திங்கட்கிழமை - கொடியேற்றம் பகல் 11 மணி

15 - 06 - 2001 வெள்ளிக்கிழமை - தண்டிகைத் திருவிழா மாலை 5 மணி

18 - 06 - 2001 திங்கட்கிழமை - சப்பறத் திருவிழா மாலை 5 மணி

19 - 06 - 2001 செவ்வாய்க்கிழமை - தேர் உற்சவம் பகல் 10 மணி

20 - 06 - 2001 புதன்கிழமை - தீர்த்தோற்சவம் காலை 10 மணி

(சி-17030) - அறங்காவலர்கள்


# சொற்றமிழ் பாடி சைவம் வளர்த்த நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர்

சைவசமய குரவர்களில் முதன்மை வாய்ந்தவர் திருஞானசம்பந்தப் பெருமான். சீர்காழியில் வந்துதித்த திருஞானசம்பந்தப் பெருமான் பாலறாவாயர், காளிவேந்தர், பரசமய கோளரி, ஆளுடைய பிள்ளையார் என்ற திருநாமங்களையுடையவர்.

சைவத்தையும் தமிழையும் தம்இரு கண்ணெனப் போற்றிக்காத்து வளர்த்த ஞானசம்பந்தர் 'நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தப் பெருமான்' என்று சேக்கிழார் பெருமானால் போற்றிப் புகழப்பட்டவர். சைவம் குன்றி, சமணம் மேலோங்கி வளர்ந்த காலத்தில் தோன்றிய திருஞானசம்பந்தர் தம்மாலான மட்டும், சைவத்தைப் பேணி வளர்த்தார். மூன்று வயதிலேயே தேவாரம் பாடிய பெருமையையுடையவர் திருஞானசம்பந்தர்.

சொற்றமிழால் புகழ்பாடி இறைவனைப் பாமாலையால்

**ஞானசம்பந்தர் குருபூசை நேற்றாகும்**

துதித்தவர் சம்பந்தர். பிள்ளைபாதி, புராணம்பாதி என்று கூறுமளவுக்கு பெரியபுராணத்தில் அரைவாசி இடத்தைப் பிடித்துக் கொண்ட சம்பந்தப் பெருமான் சைவ சமயத்துக்காகவே தன்னை அர்ப்பணித்த ஒரு மகானாவார். சமணரோடு அனல்வாதம், புனல்வாதம் செய்து சைவத்தை நிலை நிறுத்திய இவரது திருமுறைகள் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுகின்றன.

மதுரையிலே குலச்சிறையாரும், மங்கையர்க்கரசியாரும் மன்னனுக்குப் பயந்து பயந்து சைவத்தைக் கடைப்பிடித்தனர். மங்கையர்க்கரசியாரின் அழைப்பின் பேரில் மதுரைக்கு வந்த ஞானசம்பந்தப் பெருமான் திருமடத்திலே தங்கியிருந்தார். அதையறிந்த பொல்லாத சமணர்கள் இவர் தங்கியிருந்த மடத்துக்குத் தீ வைத்தனர். அப்போது ஞானசம்பந்தர் சமணர் இட்ட தீயானது 'பையவே சென்று பாண்டியற்காகவே' என்று பாடியதும் பாண்டியனுக்கு வெப்பு நோய் உண்டானது. அதனால் வருத்தமுற்ற பாண்டியன் சமணரின் மயிற் பீலியால் தடவி நோயை நீக்க முயன்றான். அது இன்னும் கூடியதே தவிரக் குறையவில்லை. அவ்வேளை திரு

**ஞானக் கதிர்**

ஞானசம்பந்தப் பெருமானைப் பார்த்து ''எனக்கு வந்த இந்த வெப்புநோயைத் தேவரீரே நீக்கியருள வேண்டும்'' என்று பணிந்தான்.

காலடியில் வீழ்ந்த மன்னவன் மேல் இரக்கங் கொண்ட திருஞானசம்பந்தர் 'மந்திரமாவது நீறு'' எனத் தொடங்கும் திருநீற்றுப் பதிகத்தைப் பாடினார். அவர் கொடுத்த விபூதியைப் பூசியதும் நோய் மாறி விட்டது. பூரண குணமான பாண்டியன் சமண சமயத்தை விட்டுச் சைவ சமயத்துக்கு மாறிவிட்டான். அது கண்ட மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும் மட்டிலா மகிழ்ச்சி கொண்டனர்.

பொல்லாத சமணர்களால் சம்பந்தப் பெருமானுக்கு ஏதேனும் ஆபத்து வருமோ என்று பயந்தார் மங்கையர்க்கரசியார். அப்போது அதைக் கண்ணுற்ற ஞானசம்பந்தர், ''மானினேர்விழி'' என்ற திருப்பதிகம்பாடி அஞ்சவேண்டாம் என்று ஆறுதலளித்தார்.

பல்வேறு அற்புதங்கள் செய்தவர் ஞானசம்பந்தர் ஆண்பனைகளைப் பெண் பனைகளாக்கினார். முத்துச் சிவிகையும் முத்துக் குடையும் முத்துப் பந்தரும் கிடைக்கப் பெற்றார். பொற்றாளம் கிடைக்கப் பெற்றார். பாம்பு தீண்டி இறந்த பெண்ணை உயிர் பெற்றெழச் செய்தார் இப்படி சிவபிரான் அருளால் பல அற்புதங்கள் செய்த ஞானசம்பந்தர் வைகாசி மூல நன்னாளில் ''காதலாகி'' என்ற திருப்பதிகம் பாடிக்கொண்டே அங்கே தோன்றிய திருச்சோதியில் இரண்டறக் கலந்தார். திருமண நாளாகிய வைகாசி மூலம் ஞானசம்பந்தரின் குருபூசை நாளாகும்.

ஈழநாட்டிலே திருஞானசம்பந்தரின் பெருமையை உணர்த்த ஸ்ரீலஸ்ரீ பரமாச்சார்ய ஸ்வாமிகள் (மணி பாகவதர்) அவருடைய பெயரால் ஓர் ஆதீனமே நிறுவி

**இ. ஸ்ரீதரன்**

யுள்ளார். நல்லூரிலே கந்தசுவாமி கோயிலுக்கு அணித்தாக அமைந்துள்ள இந்தத் திருஞானசம்பந்தர் ஆதீனம் சேவையில் முன்நிற்கிறது.

தேவாரப் பண்ணிசை, தீட்சை, தேகாரோக்கியம், பாலர் வகுப்பு, சைவ சமய பாட வகுப்பு, சித்தாந்த வகுப்பு, பண்டித வகுப்பு என்று பலதரப்பட்ட வகுப்புகளையும் நடத்தித் தன்னாலான சமயத் தொண்டினைச் செய்துவரும் இந்தத் திருஞானசம்பந்தர் ஆதீனம் செய்யும் சேவை மகத்தானது.

சொற்றமிழால் இசைபாடி சைவம் வளர்த்த சைவநாயன்மார்களில் திருஞானசம்பந்தர் முதன்மை வாய்ந்தவராவார். அவரது தேவாரப் பாடல்களைப் பண்ணோடு ஓதி இசைபாடுதல் மூலம் நாம் பக்தியை மேம்படுத்தலாம். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தர் பொற்றாள் பணிந்து உய்தி பெறுவோமாக.


# முதலாண்டு நினைவஞ்சலி



மலர்வு 28 — 09 — 1949

உதிர்வு 18 — 06 — 2000

**திருமதி இலட்சுமணன் தவமலர்**

திதி: 08 - 06 - 2001

நீங்கள் எமக்கு வழிகாட்ட
நாங்கள் உங்கள் வழிநடக்க
எப்போதும் நீங்கள் எங்களுடன்;
எங்களுக்குள் பிரிவே இல்லை!

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

தியேட்டர் லேன்,
இணுவில்.

(88752)

# புலிகளின் நிபந்தனைகளுக்கு ஏற்ப அரசை ஆட்டிப்படைக்கிறார் சொல்ஹெய்ம்

இந்த நாட்டில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதில தமிழ் மக்கள், சிங்கள மக்கள், அரசு, சர்வதேசம் எனப் பலதரப்பினரும் விரும்பி எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில் அப்படியான ஒரு பிரச்சினையே நாட்டில் இல்லை எனக் கூறுவோரும் உள்ளனர். அவர்களில் அறப்படித்தவர்களும் அடங்குவர். பேராசிரியர் நளின் டி சில்வா எழுதி 'திவயின' ஞாயிறு இதழில் வெளியான அவரது கட்டுரையின் தமிழாக்கத்தை அவரது நடையிலேயே தருகிறோம்.

சொல்ஹெய்ம் பயங்கரவாத அமைப்புடன் பேச்சுவாத்தைகளை முடித்த பின்னர் ஏன் அமெரிக்கா சென்றார் என்பது பற்றி இன்னமும் உத்தியோகபூர்வமாகத் தெளிவுபடுத்தவில்லை. புலிப்பயங்கரவாதத் தலைவர்களைச் சந்திக்க வன்னிக்குச் சென்ற அவர் தமிழ்ச்செல்வனின் நிபந்தனைகளுடன் திருமபி வந்தார். புலிப் பயங்கரவாதிகள் மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட வேண்டும் என்பது அந்த நிபநதனைகளில் ஒன்றாகும். கொழும்பு திரும்பிய சொல்ஹெய்ம் அந்த நிபந்தனைகளை ஜனாதிபதிக்குத் தெரிவித்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை. அந்த நிபந்தனைகளுக்கு அரசை உடன்பட வைக்க சொல்ஹெய்ம் முயற்சித்திருப்பார் என்பதும் தெளிவு. சொல்ஹெய்ம் என்பவர் பயங்கரவாத அமைப்பின் நிபந்தனைகளுக்கு அரசை உடன்பட வைக்கும் பணியை ஏற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர் ஆவார். உத்தேச சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான பின்னணிகளை உருவாக்குவது என்பது இந்நாட்டிலுள்ள சிங்கள மக்களுக்கு உரித்தானதும் உரித்தாக வேண்டியதுமான உரிமைக ளைப் பறித்தெடுப்பதற்கும் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் பெயரளவுக்கேனும் ஒரு சிங்களவன் கூட வாழ வாய்ப்பளிகாமல் விடுவதற்கும் எடுக்கப்படும் நடவடிக்கையாகும் எனவேதான் சொல்ஹெய்ம் புலிகளின் நிபந்தனைகளுக்கு அரசாங்கத்தை உடன்பட வைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். புலிகள் மீதான தடையை தற்காலிகமாக நீக்க அரசாங்கம் எடுத்த முயற்சியானது அரசுக்கு சொல்ஹெய்ம் கொடுத்த அழுத்தம் காரணமாகவே என்பது தெளிவாகிறது. எவ்வாறாயினும் அரசாங்கத்திலுள்ள ஒரு சில அமைச்சர்கள் மற்றும் ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்புக் காரணமாக அந்த முயற்சியானது குறைப் பிரசவத்தில் முடிவுற்றது.

## தமிழில்: கஜனி

இருப்பினும் சொல்ஹெய்ம் தனது முயற்சிகளைக் கைவிடவில்லை. தமிழ் இனவாதிகளின் அபிலாஷைகளை நிறைவேற்றிய பின்னரே அவர் சற்று ஓய்வெடுப்பார். எனவேதான் அரசு சொல்ஹெய்முக்கும் நோர்வேயின் சமாதான முயற்சிகளுக்கும் வாய்ப்பளிக்கக் கூடாது.

### ஏன் அமெரிக்கா சென்றார்?

சொல்ஹெய்ம் ஏன் அமெரிக்கா சென்றார் என்பதற்குக் குறிப்பான காரணங்கள் எவை என்பதை அறிந்து கொள்ள முடியாவிடினும் இதுவரையான அவரது செயற்பாடுகளை வைத்து அமெரிக்கா சென்ற காரணதைப் புரிந்து கொள்ள முடியும். சில வேளை சொல்ஹெய்மினால் புலிகளின் நிபந்தனைகளுக்கு அரசை உடன்பட வைக்க முடியும். ஆனால் அரசின நிபந்தனைகளுக்கு புலிகளை உடன்பட வைக்கும் ஆள் அலலர் அவர். அவரோ அல்லது நோர்வே நாடோ நடுநிலைமையாளர்கள் அல்லர். அவர்கள் புலிப் பயங்கரவாத அமைப்பின் பாதுகாவலர்கள். அமெரிக்க அரசு ஊடாக புலிகளின் தடையை நீக்கும் முயற்சியில் சொல்ஹெய்ம் ஈடுபட்டுள்ளார். அதன் மூலம் சொல்ஹெய்ம் நாட்டின் இறைமைக்கு ஊறுவிளைவிக்க முற்படுகிறார். அமெரிக்க அரசு ஏதோ ஒரு காரணத்தால் தனது நாட்டில் புலிப் பயங்கரவாத அமைப்புக்குத் தடை விதித்துள்ளது. காரணம் எவையாயினும் புலிப் பயங்கரவாத அமைப்பை உத்தியோக பூர்வமாகத் தடைவிதிக்கப்பட்ட அமைப்பாகவே அமெரிக்கர்கள் கருதுகின்றார்கள். அவ்வாறே பிரித்தானிய அரசும் புலிப் பயங்கரவாத அமைப்பை பயங்கரவாத அமைப்பாகத் தடைசெய்துள்ளது. என்ன காரணத்திற்காக பிரித்தானிய அரசு புலிப் பயங்கரவாத அமைப்பைத் தடைசெய்தது எனக் குறிப்பாகக் கூற முடியாமலுள்ளது.

மிகவும் காலம் தாமதித்த பின்னரே சிறிலங்கா அரசு புலிப் பயங்கரவாத அமைப்பைத் தடை செய்தது. அறந்தலாவையில் பௌத்த பிக்குகளைப் படுகொலை செய்தமை, அநுராதபுரத்தில் சிறிமஹாபோதி அருகே மேற்கொண்ட படுகொலைகள், கொழும்பு புறக்கோட்டையில், மருதானையில், மத்திய வங்கியில், தெஹிவளையில் குண்டுகளை வெடிக்க வைத்து மேற்கொண்ட படுகொலைகள், சொத்துக்களின் அழிவுகள், நிராயுதபாணிகளான சிங்களக் கிராமவாசிகளை கிராமம் கிராமமாகக் கொன்றொழித்தமை, நாட்டின் ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் மற்றும் பல அரசியல்வாதிகளைப் படுகொலை செய்தமை போன்ற பாஸிச, மிலேச்சப் படுகொலைகள் பலவற்றை மேற்கொண்ட பின்னர் இறுதியாக கண்டி தலதா மாளிகைத் தாக்குதலின் பின்னரே புலிப் பயங்கரவாத அமைப்புத் தடை செய்யப்பட்டது. சிறிலங்கா அரசு புலிப் பயங்கரவாத அமைப்பைத்

## இனப்பிரச்சினையே இல்லை என்கிறார் நளின் டி சில்வா

தடை செய்யுமுன்னரே இந்திய அரசு அந்த அமைப்பைத் தடை செய்தது என்பதை நாம் நினைவில் வைத்திருத்தல் வேண்டும்.

ஒரு காலத்தில் புலிகளை இந்தியா பாலூட்டி வளர்த்த போதிலும் ராஜீவ்காந்தி படுகொலையைத் தொடர்ந்து புலிப்பயங்கரவாத அமைப்பு மீது தடைவிதிப்பது குறித்து இந்திய அரசுக்கு இரு முறை சிந்திக்க வேணடிய தேவை உருவாகவில்லை. இந்தியா அப்போது சிறிலங்காவின் பாதுகாப்பு பற்றிப் பார்க்கவில்லை. தமது நாட்டின் நலன் குறித்தே சிந்தித்தது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் வெளிநாட்டுக் கொள்ளைகளுக்கு ஏட்டிகுப் போட்டி போல் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்ளைகள் அமைந்த காரணத்தால் புலிகள் அமைப்பு இந்தியாவால் போஷிக்கப்பட்ட போதிலும் தஙகளுக்கு அச்சுறுத்தலாக அமைந்த உடனேயே புலிப் பயங்கரவாத அமைப்பை அந்நாடு தடை செய்தது. ஆனால் சிறிலங்கா அவ்வாறு செயறபடவில்லை. நாட்டின் சமாதானத்திற்கு மாத்திரமன்றி இயல்பு நிலைக்கும் அச்சுறுத்தலாக விளங்கிய புலிப்பயங்கரவாத அமைப்பைத் தடை செய்வதில் சிறிலங்கா அரசு பின்னடித்தது. இறுதியாக தலதாமாளிகை மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலின் பின்னர் புலிகளுக்கு எதிராக மக்கள் திரண்டெழுந்த போதே அந்த அமைபபைத் தடைசெய்ய சிறிலங்கா அரசு நடவடிக்கை எடுத்தது.

### சொல்ஹெய்மின் தந்திரம்

சமாதானப் பேச்சுக்களை மேற்கொள்வதாயின் தமது அமைப்பு மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்வேண்டுமென புலிப்பயங்கரவாதிகள் முன் நிபந்தனைகளை விதிக்கின்றனர். சமாதானப் பேச்சுக்களுக்கு பொருத்தமான சூழ்நிலையை உருவாக்குவது என்ற போர்வையில் புலிப் பயங்கரவாத அமைப்பு மீது விதிக்கப்பட்ட தடையை நீக்குவது தொடர்பாக அரசுக்கு அழுத்தம் கொடுப்பதே சொல்ஹெய்மின் தந்திரமாகும். புலிகள் அமைப்பின் பல வருட செயற்பாடுகளை கண்காணித்த பின்னரே அமெரிக்க அரசு அந்த அமைப்பைத் தடை செய்தது. புலிப் பயங்கரவாத அமைப்பு இதற்கு முன்னரும் பல தடவைகள் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டது. புலிகள் இதற்கு முன்னர் 'சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டதால் அந்த அமைப்பை தடைசெய்யலாமா என்ற பிரச்சினை அமெரிக்க அரசுக்கு எழவில்லை. ஆனால் தற்போது அமெரிக்காவில் புலிப்பயங்கரவாத அமைப்பு தடை செய்யப்பட்ட அமைப்பாகும். அந்த அமைப்பு மீது விதிக்கப் பட்ட தடையை நீக்குவதற்கு புலிகள் ஆகக் குறைந்தது தாங்கள் பயங்கரவாதிகள் அல்லர் என்பதை இன்னும் நிரூபிக்கவும் இல்லை. புதிதாக எதையும் மேற்கொள்ளவுமில்லை. அமெரிக்க அரசு புலிகளை தடைசெய்த போது இருந்த நிலைமையே இன்றும் தொடர்ந்து நிலவுகிறது.

கிராமம் கிராமமாகச் சிங்கள் கிராமவாசிகள் தொடர்ந்தும் கொலை செய்யப்படுகின்றனர். எனவே சமாதானப் பேச்சுக்களுக்காக அந்த அமைப்பு மீது விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும் எனக்கோருவது நகைப்புக்கிடமானது. சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுவதால் மாத்திரம் புலிகள் ஜனநாயகவாதிகளாகிவிட மாட்டார்கள். மேலும் இதற்கு முன்னர் இடம்பெற்ற சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றியதன் மூலம் எதை எடுத்துக்காட்டினர்? சமாதானப் பேச்சுக்களில் பங்கு பற்றினாலும் தங்களது பயங்கரவாதப் போக்கைக் கைவிட மாட்டோம் என்பதையே அவர்கள் எடுத்துக்காட்டினர். இவ்வாறான நி[illegible]யில் புலிகள் மீதான தடையை [illegible]வதற்கு அமெரிக்க அரசிற்கு உ[illegible]பூர்வமான காரணங்கள் எவை[illegible]ாகத் தெரியவில்லை.

உத்தேச சமாதான பேச்சுவார்த்தைகளில் பங்கு பற்றினாலும் விதிக்கப்பட்ட தடை நீக்கப்படக் கூடாது என்றே அமெரிக்க அரசு சொல்ஹெய்முக்கும் புலிப் பயங்கரவாதிகளுக்கும் தெரிவிக்க வேண்டும். அமெரிக்க அரசு புலிப் பயங்கரவாத அமைப்பை என்ன காரணத்திற்காகத் தடை செய்திருந்தாலும் அமெரிக்க அரசின் உத்தியோக பூர்வமான நிலைப்பாட்டை நாம் பயன்படுத்த வேண்டும். மேற்குலகத் தினரின் உத்தியோகபூர்வமான சர்வதேச தொடர்புகளையும் உத்தியோகபூர்வமான அறிவிப்புக்களையும் நாமும் உத்தியோகபூர்வமாக பயன்படுத்த வேண்டும். அமெரிக்கா தனது நாட்டில் புலிகள் மீதான தடையை நீக்காமல் புலிகள் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்குமாறு எங்களைக் கோர அவர்களுக்கு எவ்வித தார்மீக உரிமையும் இல்லை. உத்தியோகபூர்வமற்ற அரசியல் தார்மீக உரிமைக்கு முக்கியத்துவம் இல்லையாயினும் உத்தியோகபூர்வமான விடயங்களில் தார்மீக உரிமைக்கு மிகவும் முக்கியத்துவம் உண்டு.

தடையை நீக்காவிடின் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்ள



கடந்தமாதம் வன்னியில் தமிழ்ச்செல்வனை சொல்ஹெய்ம் சந்தித்த போது..........

மாட்டோம் எனப் புலிப் பயங்கரவாதிகள் அறிவித்தால் மேற்குலக நாடுகள் நேர்மையுடன் செயற்பட்டு ஆற்ற வேண்டிய பணி ஒன்று மட்டுமே உள்ளது. அதாவது புலிப் பயங்கரவாதிகளைத் தோற்கடிப்பதற்கு ஸ்ரீலங்கா அரசுக்கு ஒத்துழைப்பை வழங்குவதே அவர்கள் ஆற்றக்கூடிய ஒரே யொருபணி ஆகும். இது தவிர மாற்று வழிகள் வேறு ஏதுமில்லை. ஏதோ ஒரு காரணத்திற்காக புலிப் பயங்கரவாத அமைப்புத் தடைசெய்யப்பட்டாலும் இன்று அமெரிக்கா அந்த அமைப்பை பயங்கரவாத அமைப்பு எனத்தெரிவித்த பின்னர் இன்று சொல்ஹெய்மை அரவணைக்க முடியாத நிலை பிரித்தானியாவுக்கு உருவாகியுள்ளது. சொல்ஹெய்ம் புலிப் பயங்கரவாத அமைப்பை ரட்சிக்க முன்வருவதில் இருந்து அவரது நேர்மையீனம் நிரூபிக்கப்படுகிறது.

சிறிலங்கா ஒரு வறிய, சிறிய நாடு என்பது உண்மையே. இருப்பினும் மேற்குலகத்தார் போடும் தாளத்திற்கு நாம் ஆடவேண்டிய தேவை இல்லை. மேற்குலத்தவர் உத்தியோகபூர்வமாகக் மேற்கொண்டவற்றை, உத்தியோக பூர்வமாக கூறியவற்றை நாங்கள் எமது தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டும்.

இருப்பினும் எமது தேவை என்ன என்பதே இங்கு பிரச்சினைக்குரியதாகும். அரசாங்கத்தின் உத்தியோக பூர்வ அறிவிப்பின் படி தமிழ் மக்களுக்கு தமிழர் என்ற காரணத்தினால் பிரச்சினைகள் உள்ளன என்பதே அரசு இன்றும் ஏற்றுக்கொண்ட கொள்கையாக உள்ளது. குறித்த இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டிய தேவை அரசுக்கு உள்ளது. தமிழ் மக்களுக்குத் தமிழர் என்ற காரணத்தினால் பிரச்சினைகள் இருக்குமாயின் அந்தப் பிரச்சினை முழு நாட்டிற்கும் பொருத்தமான விதத்தில் தீர்க்கப்பட வேண்டுமே தவிர வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு மட்டும் பொருத்தமான விதத்தில் அல்ல. வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு 'அரசமைப்பு ரீதியான' அதிகாரங்களை வழங்கினால் ஏனைய மாகாணங்களில் வசிக்கும் தமிழ் மக்களுக்கு இருப்பதாகக் கூறப்படும் பிரச்சினைகளுக்கு எவ்வாற தீர்வினைக் காண முடியும்? இதனால் உருவாகப் போவது பிரச்சினைக்குத் தீர்வு காண்பதல்ல. பதிலாக தமிழ் இனவாதிகளின் அபிலாஷையான சிங்களத்துவத்தைப் பலவீனமாக்குதலும் பெயரளவுக்கேனும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஒரு சிங்களவனையும் இல்லாமல் செய்வதுமே ஆகும். நாட்டின் ஏழ்மையைக காட்டிலும் மேற்குறிப்பிடப்பட்ட அழிவுக்கு ஒப்பான கொள்கை காரணமாகவே அரசாங்கத்தால் நிமிர்ந்து செயற்பட முடியவில்லை. அரசாங்கம் அனுசரித்து வரும் லிபரல் மற்றும் மார்க்ஷிசக் கொள்கைகளாலேயே இநநிலைமை உருவாகியுள்ளது. ◆

# ஈழத்தமிழ் மக்கள் மீது மிகுந்த அக்கறை உண்டு

## பிரிட்டிஷ் தொழிற்கட்சி வேட்பாளர் கூறுகிறார்

லண்டன்,ஜூன்8

இலங்கைத் தமிழர்கள் மீது நான் மிகவும் அக்கறை கொண்டவனாக இருக்கிறேன். அவர்களுக்கு அவர்களின் நாட்டில் இழைக்கப்படும் இன்னல்களை நன்கு நான் அறிவேன். அவர்கள் தம் நாட்டில் அனுபவிக்கும் துயரங்கள் அதிகமானவை.

இவ்வாறு கூறியுள்ளார் பிரிட்டனின் தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹெரத் தோமஸ். பிரிட்டனில் வாழும் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவை பெற்றவர் ஹெரத் தோமஸ்.

நடந்து முடிந்து பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் கட்சியான தொழிற்கட்சி சார்பில் தோமஸ் போட்டியிட்டார். தனது தேர்தல் பிரசார உரையின்போதே அவர் தமிழ் மக்களை முன்னிலைப் படுத்திப் பேசினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஆசியாவின் எப்பகுதியிலிருந்தும் பல துன்புறுத்தல்களின் மத்தியில் பல துன்பங்களுடனும் சொத்துக்களை இழந்து எம்மிடம் தஞ்சம் அடைபவர்களை நாம் ஆதரிப்போம். அவர்களுக்கு ஆவன செய்யவேண்டியது எமது கடமை.

நாடாளுமன்றத் தேர்தல் மூலம் நான் எம்.பி.ஆகுவேன். எனது முதல் கட்ட நாடாளுமன்ற நடவடிக்கையையாக தமிழ் மக்கள் தொடர்பாக போராடுவேன்.

நான் இலங்கைக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்வையிடவுள்ளேன். அவற்றை எமது நாடாளுமன்றில் எடுத்துக் கூறுவேன் தமிழ்ப் பிரதேசங்கள் ஒவ்வொன்றுக்கும் சென்று அவர்களின் பிரச்சினைகளைக் கண்டறிவேன்.

இலங்கையில் தமிழர்கள் அவர்கள் தம் உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் - துன்பங்களைச் சுமந்த வண்ணம் - வாழ்கிறார்கள். எமது நாட்டில் தமிழர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து தீர்த்து வருகிறேன். தேவையான வசதிகளை வழங்குகிறேன்.

நான் தமிழ் மக்களுக்கு என்றும் நன்றியுடையவனாக இருப்பேன் - என்றார்.

பிரிட்டிஷ் தேர்தல் முடிவுகள் இன்று வெளியாகின்றன. (ஐ)

## ஆலயத்தில் திருத்த வேலை

சுன்னாகம்,ஜூன்8

கடும் சேதத்துக்குள்ளாகி இருக்கும் நுணாவிற்குளம் கண்ணகையம்மன் ஆலயத்தைத் திருத்தி, பூஜை வழிபாடுகளை ஆரம்பிக்கும் நடவடிக்கையை ஆலயக் குருக்கள் மேற்கொண்டுள்ளார்.

மடப்புள்ளி, அலுவலகம், வசந்த மண்டபம் உட்பட மண்டபங்கள் சேதமடைந்தும், இடிந்தும் போயுள்ளன.

இவ்வாலயத்தில் இடிபாடுகளை அகற்றி, ஆலயத்தைச் துப்புரவு செய்யும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ஐ-27)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

இந்து, பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர்ந்துகொண்டிருக்கும் 27 வயதுடைய கிரகபாவம் குறைந்த மணமகனுக்கு பெற்றோருடன் வெளி நாட்டில் வசிக்கும் அல்லது வெளி நாடு செல்லும் மணமகள் தேவை. மணமகனை வெளிநாட்டிற்கு எடுக்கக்கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும். வி.இல.1298, மே/பா உதயன். (88537)

### ENGLISH CLASSES

English Teacher with experience in teaching in schools and Higher Education Institutions offers English tution for all classes. For O/L, A/L and University Students Special English Classes in small groups. Visiting will be Considered Contact. New No. 33, Palaly Road, Jaffna. (near Illupaiaddy Junction). (88782)

### படிவம்

அரசகரும மொழிகள் திணைக்களத்தின் மனிதவள வங்கியில் பதிவு பெறுவதற்கான விண்ணப்பப் படிவம் விற்பனையாகின்றது. முடிவு திகதி 2001-06-25. பாரதி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C/17025)

### இசை வகுப்புகள்

எமது "நியூ வீணாகானம்" இசை மன்றில் வீணை, வயலின், பாட்டு, புல்லாங்குழல், ஓர்கன், கிற்றார், மெலோடிக்கா, மௌத்ஓர்கன், றெக்கோடர் வகுப்புகள். ஆரம்பம்: 9.00 A.M. - 6.00 P.M. தொடர்பு:- வாசுகி ரங்கன், 16/2, கச்சேரி நல்லூர் வீதி. 60, வைமன் வீதி, நல்லூர். (88710)

### விற்பனைக்கு

கொம்பிரேசர், பாத், மிபிரிசர், ஐஸ்பழப் பெட்டிகள், தட்டுக்கள், ஐஸ்கிறீம் மீற்றர் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: தி.கஜன், 12/5, சந்தனமாதா கோயில் வீதி, பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குளி. (88717)

NEW MODEL SONY (QW3), COLOUR T.V 21", PANASONIC SR 38 டெக், XB 5 150W PANASONIC றேடியோ செற் மற்றும் கடைப்பாவனைக்குரிய கண்ணாடி அலுமாரி, மேசை மற்றும் BROWNS ELECTRIC WATER PUMP, 5 அடி நீளமான சீற் (கூரை) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- சிவா, கம்பளை இல்லம், வட்டக்குளம் முன்பாக, கட்டப்பிராய். (88725)

றோனியோ மெசின் கொம்பியூட்டர் பிறிண்ரர் ஆகியவையும் இரண்டு அச்சகங்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 282, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (88796)

### தவறிவிட்டது

கை (பவுண்)ச் சங்கிலி ஒன்று புத்தூர் "ஆமி சென்றிக்கு அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் Mr K.றாகவன், "குணாவில்லா", பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (88764)

சண்டிலிப்பாயைச் சேர்ந்த அனிதா தெய்வேந்திரன் ஆகிய எனது தே. அ.அட்டை (இல.788130317V),விசேட அ.அ.அட்டை (இல.0905017733) என்பன 2.6.2001 இல யாழ்நகர் தடடாதெருச் சந்திக்கும், வண்ணார் பண்ணை சிவன் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டன. இதைக் கண்டெடுத்தவர்கள் பிரதேச செயலகம், வலி.வடக்கு, தெல்லிப்பழை என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (88777)

ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ம.சி.செல்வநாயகம் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.641630993v), விசேட அ.அட்டை, இலங்கை வங்கி JOB CARD, என்பன சுதுமலை அம்மன் கோயிலுக்கும், கோயில் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 26/1, கோயில் வீதி, யாழ்ப்பாணம் அல்லது இலங்கை வங்கி மானிப்பாயில் ஒப்படைத்துதவவும். (88785)

---

# பாராட்டி வாழ்த்துகிறோம்



யா/தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர்

**திரு. ம.கணபதிப்பிள்ளை**

அவர்கள் இலங்கை அதிபர் தரம் I இற்குப் பதவி உயர்வுபெற்றமையினையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைவதோடு அவர் பணி மேன் மேலும் சிறக்கவும் பல்லாண்டு காலம் பார்தனில் சேவை செய்யவும், எல்லாச் சிறப்புக்களும் பெற்று சீரோடும் சிறப்போடும் நீடூழி காலம் வாழ்க என உளமார வாழ்த்துகிறோம்.

சி.முத்துராசா
(உரிமையாளர்- முத்துராசா புரடக்ஷன்ஸ்)

பிள்ளையார் கோயில் ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை. (88799)

---

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு அறிவித்தல்

பொருளியல் பாடத்தில் கீழ்வரும் கற்கை நெறிகளில் புதிய பாடத்திட்டம் இவ்வருடம் பதிவு செய்யும் மாணவர்களுக்கு நடைமுறைக்கு வருகிறது.

1. கலை முதற்தேர்வு - பொருளியல்
   - EXECN 1.1 நுண்பாகப் பொருளியல் தத்துவங்கள்
   - EXECN 1.2 பேரினப் பொருளியல் தத்துவங்கள்
2. வணிக முதற்தேர்வு - பொருளியல்
   - EXCOM ECN 1.2 வங்கியியலும் நிதியும்

இப் புதிய பாடத்திட்டத்திற்கமைந்த முதற்தேர்வு செப்டம்பர்/ஒக்ரோபர் 2002இல் நடைபெறும்.

பழைய பாடத்திட்டத்தில் பரீட்சைகளுக்குத் தோற்றிச் சித்தியடையத் தவறிய தேர்வுநாடிகளுக்கு செப்டெம்பர்/ஒக்டோபர் 2003 தேர்வுவரை பழைய பாடத்திட்டத்தில் தோற்ற சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

பதிவாளர்
01-06-2001 (C/17029)

---

# 45ஆம் நாள் நினைவுச் சுடர்

தாயின் மடியில் 06.12.1973



மண்ணின் மடியில் 25.04.2001

## செல்வி புண்ணியமூர்த்தி பாமதி

என்றும் எம் நினைவில் - நின்
அன்பு அறுந்து முடிந்திடுமோ?
மாண்டதென்று மனம் நினைத்திடுமோ?
மனதை விட்டு நினைவு விழுந்திடுமோ?
மீண்டதென்று நின்னுயிர் மீள வந்திடுமோ
கண்மணியிலே காணும் காட்சியெல்லாம் மறைந்திடுமோ
புத்திமதிகள் பல கூறிய வித்தகியே!
எம்மைத் தவிக்கவிட்டு சரித்திரமாய் போனதேனோ!!

உங்கள் நினைவோடு பாரினிலே பரிதவிக்கும்:
பாசமிகு பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்.

கரந்தாய், பளை. (88788)

---

உ

# கலட்டி எச்சாட்டி ஸ்ரீ மஹாமாரியம்மன் ஆலய மகா சபைக் கூட்டம்

## 2001/2002

மேற்படி ஆலய மகாசபைக் கூட்டம் எதிர்வரும் (17.06.2001) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் நிகழவிருக்கின்றது என்பதை அங்கத்தவர்களுக்கு அறியத்தருகின்றோம். அங்கத்தவர்கள் தமது அங்கத்துவப் பணத்தை கோயிலில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளவும். ஆலய அயலிலுள்ளவர்கள் புதிய அங்கத்தவர்களாகச் சேர விரும்பின் அவர்களும் அங்கத்துவப் பணம் ரூபா 100/= (ஆயுள் 1000/=) செலுத்தி அங்கத்தவராகி, மகாசபைக் கூட்டத்தில கலந்துகொள்ளலாம் என அறியத்தருகின்றோம். உற்சவ உபயகாரர் அனைவரையும் இக் கூட்டத்திற்குச் சமுகந்தருமாறு வேண்டுகின்றோம்.

(88763) - ஆலய பரிபாலன சபை.

---

உ
கணபதி துணை

# ஸ்ரீ சொர்ணசித்தி பஞ்சமுக விநாயகர் தேவஸ்தானம்

அடியார்களே!

உடுவில், ஸ்ரீ சொர்ணசித்தி பஞ்சமுக விநாயகர் ஆலயத்தில் பரிவார மூர்த்தியாக இருக்கும் அம்பாளின் கதவு அடைக்க வேண்டும் என்ற அன்னையின் வாக்கை ஏற்று 24-02-2001 தொடக்கம் கதவு சாத்தப்பட்டுள்ளது. இத்திருக்கதவைத் திறப்பதற்கு வேத பாராயணங்கள், பஜனைகள் ஓத வேண்டும் என்பதும் அன்னையின் வாக்கு. இவையெல்லாம் இடைவிடாது முறையாக பக்தி சிரத்தையுடன் ஓதினால் அத்திருக்கதவு அடியாரின் கண்ணுக்கு முன்பாகத் தானாகவே திறபடும் என்பதையும் அன்னையே கூறுகிறார். ஆகையால் திருமுறைகள் ஓதுபவர்கள் சமுகம் தந்து தங்களுடைய பணிகளைச் செய்யுமாறும் கேட்டுக்கொள்கிறோம். மேலும் வேதபாராயணத்திற்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது.

ஆகையால், சகல அந்தணர்களும் வருகை தந்து வேதங்களை அம்பாளின் செவிக்குக் கேட்கச்செய்வதோடு இது தங்களின் கடமை என்பதை ஏற்று வருகைதருமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். இதுவே சைவசமயத்தின் உயர்ச்சியை எடுத்துக்காட்டும் என்பதை இதன் மூலம் உறுதியாகக் கூறுகிறோம்.

**நேற்று (07-06-2001) வியாழக்கிழமை தொடக்கம் 72 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக பஜனைகளும் வேதபாரா யணங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை அறியத்தருகின்றோம்.**

சகலரும் வந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

உடுவில் வடக்கு,
சுன்னாகம். (88721) - தேவஸ்தானம்.

---

# பதவியிலுயர்ந்தோய் வாழ்க



**ந.யோகராஜன்**
(J.P ALL ISLAND B.A., PG. Dip in Edu. & Dip In Tech Edu., SLTES
பிரதி பிராந்திய பணிப்பாளர், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி அமைச்சு-வலயம் 4 வடக்கு-கிழக்கு)

அன்னையின் அகங்குளிர அகத்தாளின் மனம் மகிழ ஆருயிர் மழலைகளோடு அகவைகள் பலவுங்கண்டு அரிய இப்பதவியூடு அவனிக்குப் பணிகள் செய்க.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை.
(88802)

---

உ

# சிவாச்சார்ய அபிஷேகம்

## (குருப்பட்ட விழா)

துன்னாலை சாரதாபீட குருகுல உபாத்தியார்
பிரம்மஸ்ரீ சபா-ராமச்சந்திரஐயர் (சின்னக்குருஐயா) அவர்களின் புதல்வரும்
அல்லையம்பதி சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான பிரதமகுருவுமாகிய
சிவப்பிரம்மஸ்ரீ
**ராம்.சபாநாதசர்மா அவர்கட்கு**



சிவாச்சார்ய அபிஷேக (குருப்பட்ட விழா) 10-06-2001 ஞாயிற்றுக்கிழமை காலை 5.55 தொடக்கம் 7.15 மணிவரையுள்ள சுபவேளையில் அல்லையம்பதி தேவஸ்தான மண்டபத்தில் நடைபெறும்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

தீக்ஷாகுரு - சிவப்பிரம்மஸ்ரீ நா.யோகீஸ்வரக்குருக்கள் (அத்தியடி பிள்ளையார் கோவில் பிரதமகுரு)

வரவேற்புபசாரம்

நா.சிதம்பரேஸ்வரக்குருக்கள் (இரணைமடு)
யோ.கேதீஸ்வரசர்மா (துன்னாலை)
க.வீரமணி ஐயர் (நெல்லியடி)
ந.மகேஸ்வரக்குருக்கள் (சரசாலை)

சாரதாபீடம் சார்பில்
சிவப்பிரம்மஸ்ரீ ராம்.கெங்காதரக்குருக்கள் (லண்டன்)
சிவப்பிரம்மஸ்ரீ ராம்.சர்வலோகேஸ்வரக்குருக்கள் (கனடா)
சிவப்பிரம்மஸ்ரீ ராம்.தேவலோகேஸ்வரக்குருக்கள் (கொழும்பு)

(88798)

# சிறுவர்களின் உலகம்

இளஞ்சிறார்களின் பிஞ்சு உள்ளங்களில் வாழ்க்கையிலே மறக்க முடியாத சம்பவங்கள் பதிந்துவிடுகின்றன. இளமை, நடுத்தர வயதினர் மாத்திரமல்ல வயோதிபரான பின்பும் கூட சிறுவயதிலே பெற்ற பல்வேறுபட்ட அனுபவங்களை ஞாபகப்படுத்தி மகிழ்ச்சி அடையக் கூடியதாகவிருக்கும்.

சிறுவயதில் பெற்ற இனிப்பான நிகழ்வுகள் போன்றே கசப்பான அனுபவங்கள் வாணாள பூராகவும் வேதனையைத் தரக்கூடியவையாக இருக்கும். சிறுபிள்ளைகளைத் துஷ்பிரயோகஞ்



செய்து, சித்திரவதை செய்வது சிறுவர் வாழ்வில் மறக்க முடியாத அனுபவமாகும்.

பல உயிரினங்கள் தமது குஞ்சுகளை குஞ்சுப் பருவத்தைக் கடக்கும்வரை பாது காக்கின்றன. அதிலும் முன்னேற்றமடைந்த விலங்கான மனிதன் பிள்ளைகளை நீண்ட காலமாக உணவூட்டி அவர்களின் பல்வேறு தேவைகளை நிவர்த்தி செய்தும் வருகின்றான். ஆனால் மனித வாழ்க்கை வட்டமானது முன்னேற்றமடையும்போது, சிறார்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் இழக்கப்படுகின்றன. அத்துடன் அச்சிறுவர்கள் வளர்ந்தோரின் இச்சைக்கு ஆளாவதும் அதிகரித்துக் கொண்டு செல்கிறது.

ஆசிய நாடுகளில் ஏற்படும் துஷ்பிரயோகம் குறைந்த மட்டத்தில இருப்பதாக சிலர் சிந்திக்கிறார்கள். அது எமது பிள்ளைகளுக்குத் தேவையான பாதுகாப்பு, எமது பாட்டன் பாட்டி போன்றோர்களால் பாதுகாப்பு கிடைக்கும் என்ற அடிப்படையில் பரவியுள்ளது.

இலங்கையில் உண்மையாகவே சிறுவர் துஷ்பிரயோகம் பிரச்சினையாக உள்ளதா? அல்லது இல்லாத ஒரு பிரச்சினையை பெரிதாகக் கருதுகின்றோமா?

தேசிய மட்டத்திலான அறிக்கைகளை ஆராயும் போது இலங்கை ஏதோ ஒரு மட்டத்தில் இருக்கிறதென ஏற்றுக்கொள்ள நேரிடும். ஆனால் இந்த அறிக்கைகள் மாத்திரம் போதுமானதா? மிக நெருக்கமான சம்பவங்களைத் தவிர ஏனைய நிகழ்வுகள் வெளிவருவதில்லை. அனேகமாக இவை சட்டத்திற்கு முன்னால் வருவதில்லை. பாதிப்புக்குள்ளாகி தமது வேதனைகளைப் பொறுமையுடன் தாங்கிக் கொண்டு வாழ்க்கையிலே திருப்தியை, நிம்மதியை இழந்தோர் தொகை ஏராளமாக இருக்கலாம்.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மிக மெதுவாகவும், இறுதியில் மிக வேகமாகவும் பல கிராமங்கள் பட்டினங்களாக மாறின. விசேடமாக அரசாங்கத்தின் திறந்த பொருளாதரக் கொள்கை, உல்லாசப் பிரயாணத தொழில், சுதந்திர வர்த்தக வலயங்கள் போன்ற அரசியற் கொள்கைகள் இம்மாற்றங்களுக்குக் காரணமாயின.

இலங்கையின் வடக்கு - கிழக்கு யுத்த பிரதேசத்திலுள்ள சிறார்களில் பெரும்பாலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். நீண்ட காலமாக யுத்தம் நடைபெறும் போது குடும்ப உறவும் திருமண வாழ்க்கை, சமய வழிபாடுகள, பாடசாலைக் கல்வி போன்றவற் றின் அமைப்புகள் கட்டாயமாக வீழ்ச்சியடையவோ அல்லது செயலிழக்கவோ கூடும்.

யுத்தத்தின் போது மக்கள் இடம்பெயர்வு, சொத்துக்களை இழத்தல், அநாதைகளாகுதல், குடும்பத்தின் முககிய உறுப்பினர்கள் இறத்தல், அல்லது அங்கவீனமடைதல் அல்லது காணாமல்போதல் அல்லது குடும்ப உறுப்பினர் படைகளில் சேர்ந்து கொள்ளல் போன்ற காரணங்களால் சிறுவர்கள் கவனியாது, கைவிடப் படவோ அல்லது மறக்கவேண்டிய நிலையோ ஏற்படும். யுத்தம் காரணமாகப் பெற்



றோரின் பாதுகாப்பு, அன்பு, ஆதரவை இழத்தல், பயத்திற்காளாகுதல், இடம்பெயர்ந்த முகாம்களில் சிறுவயதிலேயே பாலியல் உறவுகளை ஏற்படுத்துதல், வேலையிலமர்தல், பிச்சை எடுத்தல் என்பவற்றுக்கு சிறுவர்கள் உட்படுத்தப்படுகின்றனர்.

20 வருட காலமாக நீடித்த யுத்தத்தினால் பொரும்பாலான நமது சிறார்கள் இக்காலப் பகுதியிலேயே பிறந்து வளர்ந்து வருகின்றனர். இதில் அனேகமானோர் ஒரு தடவையேனும் இடம்பெயர்ந்திருக்கிறார்கள். கணிசமான தொகையினர் பல தடவைகள் இடம்பெயர்ந்திருப்பதுடன் ஒரு குறிப்பிட்ட தொகையினர் அகதி முகாமில் பிறந்து அங்கேயே வளர்ந்தும் வருகின்றனர். இவர்களில் பலர் போஷாக்குக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் பாடசாலைக்குச் செல்வதை நிறுத்தியுள்ளார்கள். அத்துடன் பல சிறார்களின் பெற்றோர்கள் மதுவுக்கு அடிமையாகியுள்ளதுடன், சில இடங்களில் வருமானத்தைப் பெறுவதற்காக சிறுவர்கள் கசிப்பு விற்பனையாளர்களாக மாறியுள்ளார்கள்.

இனி நாம் ஒவ்வொருவகையான சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றி ஆராய்வோம்.

### உடல் ரீதியான துஷ்பிரயோகம்

அநேகமாக வெளிவராவிட்டாலும் பாரியளவில் காணப்படுவது சிறுவர் உடல் துஷ்பிரயோகம் ஆகும்.

குடும்பப் பிரச்சினைகள், பொருளாதார நெருக்கடிகள், வளங்களின் குறைவு போன்றவற்றினாலும் துஷ்பிரயோகங்கள் அதிகரிக்கலாம். அது மட்டுமல்ல தாக்குதல்களுக்கு ஆளாக்கியவர்கள், போதை, குடிக்குப் பழக்கப்பட்ட பெற்றோர்களினதும், சிறுவயதில் துஷ்பிரயோகத்திற்கு ஆளான பெற்றோர்களின் பிள்ளைகளும் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகலாம்.

பொதுவாக உளரீதியாக பாதிப்புறறவர்கள் அல்லது கோபத்துடன் திருப்தியற்ற நிலையில் வாழ்கின்ற பெரியோர்களினால் துஷ்பிரயோகம் ஏற்படலாம்.

அநேகமாகப் பிள்ளையின் திடீர் குழப்படியைக் கண்டு உடனடியாகக் கோபப்பட்டுச் செய்யும் தாக்குதல்கள் துஷ்பிரயோகத்திற்கான அடிப்படைக் காரணங்களாகும்.

உடல் துஷ்பிரயோகத்திற்குள்ளான பிள்ளைகளிடம காணக்கூடிய காயங்கள்

★ *கிழிவு காயங்கள்:-* விசேடமாக முதுகின் கீழ்ப்பகுதி, பெருந்தொடைப்பகுதி, கன்னம், கழுத்து, கை விரல்களில் ஏற்படும் கிழிவு, கீறல்கள்.

★ *வெடிப்பு:-* விசேடமாக மேலுதட்டில் (அழும்பிள்ளையின் வாயை மூடுவதால் இது ஏற்படும்).

★ *கடித்தல்,சுடுதல்:-* சிகரெட், விறகு கொள்ளி மூலம் இடுப்பில் சுடுதல், சுடு நீரில் இடுதல்.

★ *கண் சிவத்தல்:-* குருதி வெளியேறிய கண்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய காயங்கள்.

★ எலும்பு முறிவு

★ *மண்டை ஓட்டு வெடிப்பு:-* மூளையில குருதி கசிவு, மயக்கமடைதல், வலிப்பு, மூச்சடைப்பு ஆகியவற்றைக் காணலாம்.

அநேகமான பெற்றோர்களினால் இம்சைப்படும் பிள்ளைகளுக்கு ஏற்படும் காயங்களுக்கு வேறு ஏதேனும் காரணம் சொல்லுவார்கள். குறைந்த வயதுடைய பிள்ளைகள் தொடர்பாக கூறப்படும் இவ்வாறான தவறான கூற்றுக்களினால் வைத்தியர்களும் தவறாகப் புரிந்து கொள்ளலாம்.

உதாரணமாக நேரில் கண்ட ஒரு சம்பவம்.

அந்தப் பெண் சிறுமிக்கு வயது 8 இருக்கும். உடல் முழுவதும் சுமார் 50 காயங்கள் இருக்கும். அவளுக்கு அவளுடைய வயதைக் கூடக் கூற முடியாது. அவள் பருவமடையவில்லை. வீட்டில் வேலையாளாக இருந்த அப்பிள்ளை அவ்வீட்டு இரு பிள்ளைகளில் ஒன்றினைப் பராமரித்து வந்தாள். இது தவிர மூன்று வருடங்களாக உணவு சமைத்தல், உடுப்புத் துவைத்தல், வீட்டைச் சுத்தம் செய்தல், கிணற்றிலிருந்து நீர் இறைப்பது போன்ற வேலைகளிலும் ஈடுபட்டாள்.

தனது எஜமானியும் அடிக்கடி தன்னை அடிப்பதாகவும் கூறினாள். எஜமான் தன்னை ஒரு முறை அடித்

# சிதைகின்றதா?

ததாகவும் பிள்ளைகள் அடிக்கவில்லை என்றும் கூறினாள். அப்பிள்ளை எதைச் செய்தபோதிலும் வீட்டார் அதலே குற்றங்கண்டனர். கையினால மாத்திரமல்ல தடி, விறகு போன்றவற்றினாலும் தன்னை அடித்ததாக அவள் கூறினாள்.



சில சந்தர்ப்பங்களில் தனது தோற்பட்டை, தலைமயிர் போன்றவற்றைப் பிடித்து உலுக்கியதாகவும் கூறினாள். ஆணியுடனான தடியைக் கொண்டும் தன்னை அடித்துத் தாக்கியதாகவும் கூறினாள். கரண்டியைச் சுடாக்கி அவளது உடலிலே சூட்டுக் காயங்களை ஏற்படுத்தியதாகவும் கூறினாள். பல சந்தர்ப்பங்களில் தனது எஜமானி தன்னை தரையில் கிடத்தி ஏறி மிதித்ததாகவும் கூறினாள். எப்படியாயினும் தன்னை பாலியல் ரீதியில் துன்புறுத்தவில்லை என்று கூறினாள். அவள் உரையாடும் போது மிகவும் அப்பாவியாக இருந்தாள். இவற்றினால் ஏற்படப்போகும் பாதிப்பை அறியக்கூடியவளாக இருக்கவில்லை. பரிசோதித்த போது பல்வேறு பழைய, தற்போதைய காயங்களின் அடையாளங்கள் இனங்காணப்பட்டன.

இவ்வாறான பல நிகழ்வுகள் எங்கள் மத்தியில் சகஜமாகிக் கொண்டு வருகின்றன. இவற்றில் சில எமது கணகளிற்குப் புலப்படுகின்றன. ஆனால நாம் இது பற்றி அதிகளவு அக்கறை செலுத்த தவறுகின்றோம். இன்றைய இளைய சமுதாயம்தான் நாளை இந் நாட்டுத் தலைவர்கள். இவ்வாறு பாதிப்புக்குள்ளான பிள்ளைகள் உடல் ரீதியாக மட்டுமல்ல உளரீதியாகப் பாதிக்கப்படுகின்றார்கள். இவை மட்டுமன்றி இவர்கள் பாடசாலை சென்று கல்விகற்பதும் பாதிப்படைகின்றது. இதனால் வளர்ந்து வரும் இவ்வுலகில் இப் பிள்ளை தன்னை நிலை நிறுத்திக் கொள்ள முடியாது போகின்றது. இவன் அல்லது இவள் நாளைய சமூகவிரோதி, திருடன், கயவன், ரவுடி எனும் பல பெயர்களுடன் வீதியில். இவற்றுக்கு யார் காரணம் என ஆராய்வோம். அவற்றுக்கான விடைகளைக் கண்டு அதன் படி செயற்படுவோம். நல்லதோர் சமுதாயத்தை கட்டியெழுப்புவோம். நீங்கள் எங்கள் பணிகளுக்கு உதவிடுவீர்.

ஏதாவது இவ்வாறான நிகழ்வுகள் ஏற்படின் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்:-

*மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு (யாழ்ப்பாணம்)*
*'சாந்திகம்'*
*எண் 15, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி - 3338*

★

## சிறுவர்கள் என்றால் யார்?

*சிறுவர்கள் என்றழைக்கப்படுவது யாரை?*

18 வயதுக்குட்பட்ட அனைவரும் சிறுவர்கள் ஆவர்.

*சிறுவர் துஷ்பிரயோகம் என்றால் என்ன?*

பிள்ளைகளின் சுகாதாரததுக்கும், முன்னேற்றத்துக்கும் பாதிப்பை நிச்சயமாக ஏற்படுத்தக் கூடியவாறு அநாவசியமாக துன்பத்துக்குள்ளாக்குவதையும் அல்லது சிறார்களின் தேவைகள் நிறைவேறுவதைத் தவிர்ப்பதையும் சிறுவர் துஷ்பிரயோகம் எனக் கூறலாம்.

*துஷ்பிரயோக வகைகள் எவை?*

உடல் ரீதியான துஷ்பிரயோகம்
போசாக்குத் தன்மையைக் கவனியாது இருத்தல்.
பாலியல் வல்லுறவு.
போதைப்படுத்துவதும் நஞ்சு கொடுத்தலும்.
ஏனையோர்களுக்காகப் பொய் பேச வைப்பது.
நோயிருப்பதாகப் பொய் கூற வைப்பது.
உளரீதியான பாதிப்பை ஏற்படுத்தல்.
வேலைக்கமர்த்துதல்
யுத்தத்திற்குப் பயன்படுத்துதல்
கைவிடுதல்.

சிறுவர் பாதுகாப்பு ஆணையாளரின் அறிக்கையின்படி 1995, 1996ஆம் ஆண்டுகளில் இலங்கையில் 10,289 சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம் பெற்றுள்ளன. இதில் 56 கொலைகளும், 415 பாலியல் அபராதங்களும், 92 பாலியல் வல்லுறவுகளும் உள்ளடங்குகின்றன. சட்டத்திற்குத் தெரியப்படுத்தாதவை இவற்றைவிட 7 மடங்காக இருக்கலாம் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

---

# அரசு - புலிகள் பேச்சு மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## ஐ.தே.கவும் புதுடில்லியும் இணக்கம்

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலமே இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர முடியும் என்ற உடன்பாட்டிற்கு இந்திய மத்திய அரசாங்கமும் ஐ.தே.கவும் வந்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்தும் இந்திய அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிப்பது தொடர்பாகவுமே தனது கலந்துரையாடல் அமைந்திருந்தது என்றும் தனது இந்திய விஜயம் குறித்து கருத்துத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சருடனான பேச்சுவார்த்தையின் போது கச்சதீவுப் பிரச்சினை குறித்து ஆராயப்பட்டதாகவும், தமிழ்நாட்டின் கடற்படை அதிகாரி ஒருவர் இலங்கையிலும் இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த ஒருவரை தமிழ்நாட்டிலும் நியமிப்பதன் மூலம் தமிழக மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்றும் தான் யோசனை தெரிவித்துள்ளதாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ஐ)

# மந்திகையில் வேட்டொலி

மந்திகைப் பகுதியில் கடந்த செவ்வாயன்று 11.10 மணிக்கு இடம் பெற்ற தொடர் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவம் பருத்தித்துறை உட்பட அப்பகுதி மக்களைப் பெரும் பீதிக்குள்ளாக்கியது.

மந்திகை ஈ.பி.டி.பி. முகாம் வெளிப் பகுதியில் ஏற்பட்ட சிறு சரசரப்பை அடுத்தே முகாம் காவற்கடைமையில் ஈடுபட்டிருந்தவர்கள் தொடர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததாக தெரியவருகிறது.

கடந்த வாரம் இதே தினத்தில்- மந்திகை கண்ணகை அம்மன் கோயில் பொங்கல் விழா நிகழ்வின் போது துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (உ-15)

## குரு பீடாதிபதி ஆசி உரை

எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட் கிழமை ஆரம்பமாக உள்ள வழக்கம்பரை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவ நாளன்று இந்துமத குரு பீடாதிபதி சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள் தமது கன்னி ஆசியுரையை நிகழ்த்த உள்ளார். (ஐ-152)

# சிறையில் பெண் கைதிகளுக்கு சீருடை வழங்க அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன்8

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மறியல் தீர்ப்பு வழங்கப்பட்ட பெண் கைதிகளுக்கான சீருடையை வழங்குவதற்கு சிறைச்சாலைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நீண்ட காலமாக பெண் கைதிகளுக்கான சீருடை வழங்கப்படாது இருந்தமையால் மாற்றுடை இன்றி பெண். கைதிகள் சிரமப்பட்டு வந்தனர்.

இது தொடர்பாக சிறைச்சாலைத் திணைக்களத்திற்கு பல தடவை அறிவித்தபோதிலும் தற்போது தான் சிறைச்சாலைத் திணைக்களம் சீருடைத் துணியைப் பெற்றுக்கொள்வதற்கும் அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது துரிதமாக சீருடையைத தைத்து கைதிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட கைதிகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய இட வசதிகளோ ஏனைய வசதிகளோ செய்து தரப்படவில்லை என்றும் -

இது தொடர்பாக சிறைச்சாலை திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்த போதிலும் எதுவித நடவடிக்கைகளும் இது வரை எடுக்கப்படவில்லை என்றும் -

சிறைச்சாலையில் கைதிகளை தனித்தனியே தடுத்து வைப்பதற்குரிய சிறைக் கூடங்களை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டு அறிக்கை அனுப்பப்பட்ட போதிலும் அதற்கு கூட நிதி ஒதுக்கப்படவில்லை என்றும் சிறைச்சாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. (ஐ-6-55)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்

அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு
05
-
06
-
1940

இறப்பு
09
-
05
-
2001

## அமரர் அம்பலம் சின்னத்துரை

*அன்புடன் பரிவுடனே ஆதரித்து வளர்த்தீரே!*
*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

அன்னாரின் மரணச் சடங்கில், கலந்துகொண்டவர்களுக்கும், சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நாம் நன்றி கூறுகின்றோம். அத்துடன் இன்று (08-06-2001) வெள்ளிக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வைரவர் கோயிலடி,*
*பத்தமேனி, அச்சுவேலி.*
(88646)
*அன்னாரின் பிரிவால் துயருறும்*
மனைவி, பிள்ளைகள்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பூவுலகில்
25
-
08
-
1959

விண்ணுலகில்
09
-
05
-
2001

## அமரர் ஜோசேப் பாக்கியநாதன்

எமது வித்தியாலய ஆசிரியை

**திருமதி செ.பாக்கியநாதன்**

அவர்களின் அன்புக் கணவர்

**அமரர் பாக்கியநாதன்** அவர்களின்

31 ஆம் நாள் நினைவு தினத்தில் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/நெடுந்தீவு
மகாவித்தியாலய சமூகம்.

(C/17010)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
09
-
08
-
1964

உதிர்வு
21
-
05
-
2000

## திருமதி கிருஷ்ணானந்தன் இந்திரா

திதி:- 08-06-2001

உங்கள் சுந்தர வடிவத்தை இனி
நாம் காண்பது தான் எப்போது?
உங்கள் அமிழ்தனைய பேச்சை இனி
நாம் கேட்பதுதான் எப்போது?
உங்கள் அன்பான அரவணைப்பை இனி
நாம் பெறுவதுதான் எப்போது?
உங்கள் மதிவதன தரிசனம் இனி
எமக்குக் கிடைப்பது தான் எப்போது?

*உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (08-06-2001) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நி.முகவரி:-
*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*

த.முகவரி:-
*கொற்றாவத்தை,*
*பூவோடை,*
*வல்வெட்டித்துறை.*

பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள்.
(88740)

# விளையாட்டு விழா

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட இளைஞர் கழகச் சம்மேளனம் நடத்தும் பிரதேச இளைஞர் கழக சம்மேளனங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடை பெறவுள்ளது.

பிரதம விருத்தினராக நல்லூர் பிரதேச சபைத்தலைவரும் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்டப் பிரதி அமைப்பாளருமான க.மணிபல்லவராஜனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கமும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரும் கௌரவ விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட உதவி இயக்குநர் தி. சிவதட்சணாமூர்தியும் கலந்து கொள்வர். (ம)

# கலையரங்கம் சேதம்

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலுள்ள மாடிக் கட்டத்தின் மேல் மாடியில் நிறுவப்பட்டிருந்த கலையரங்கம் முற்றாக சேதமடைந்துள்ளது.

கடந்த போர்க்கால அனர்த்தங்களின் போது சேதமடைந்த இந்தக் கலையரங்கம் புனரமைப்புச் செய்யப்படாமையால் மாணவர்களின் கலை ஆற்றல்களை வெளிக்கொண்டு வர முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக கல்லூரி அதிபர் கவலை தெரிவித்தார். (ஐ-135)

# கலந்துரையாடல்

கொழும்புத்துறையிலிருந்து இடம்பெயர்ந்த ம்க்கள் மீளக்குடியமர்வது மற்றும் புனரமைப்பு, அபிவிருத்திப்பணிகளை முன்னெடுப்பது தொடர்பாக ஆராய்வதற்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொழும்புத்துறை ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் கலந்துகொள்ள விரும்பும் பொது மக்கள் அனைவரையும் நாளை காலை 9 மணிக்கு அரியாலை மாம்பழம் சந்தியில் ஒன்று கூடுமாறு இடம்பெயர்ந்தோர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் கொழும்புத்துறையில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்த பின்னர் அங்கு சேதமடைந்த இந்து, கிறிஸ்தவ ஆலயங்களை மீளபுனரமைத்து பூஜை வழிபாடுகளை ஆரம்பிப்பது தொடர்பாகவும்-

இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்ந்து தமது தொழில்களை மேற்கொள்வதற்குரிய சிரமங்களை அகற்றுவது குறித்தும் ஆராயப்படவுள்ளதால் அனைவரும் சமுகமளிப்பது அவசியம் என்றும் - அவர் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதனும் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ-6)

# நிதியுதவிப் படக்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூன்8

யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் சமூகம் வெளியிடவுள்ள 'மானுடம்' என்ற நூல் வெளியீட்டிற்கு நிதி சேகரிக்கும் நோக்குடன் இன்று வெள்ளிக்கிழமை சுன்னாகம் நாகம்ஸ் திரையரங்கில் திரைப்படக் காட்சி காண்பிக்கப்படவுள்ளது.

திரைப்படக் காட்சியில் 'சேது' மற்றும் 'பாரதி' ஆகிய திரைப்படங்கள் காண்பிக்கப்படவுள்ளன. ஆர்வலர்கள் நுழைவாயிலில் அனுமதிச் சிட்டையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று சமூகவியல் சமூகம் அறிவித்துள்ளது. (ஐ-6)

# வாழ்த்துகின்றோம்

சைவ உலகு முழுவதும் சென்று பல நூறு ஆலயங்களில் குடமுழுக்கு விழா நடத்தி எம்மவர்க்குப் பெருமை சேர்த்த

பிரதிஷ்டா சிரோமணி

**நாவாலி சாமி விஷ்வநாதக் குருக்கள்**

அவர்களுக்கு கொழும்பில் நடைபெறும் பவளவிழா இனிதே நடைபெற சுழிபுரம் பறாளாய் முருகன் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

*பறாளாய் முருகன் ஆலயம்,*
*சுழிபுரம்.*
(C/17012)
சங்காபிஷேக சபை

உ
சிவமயம்

# அந்தியேஷ்டி சபிண்டீகரண அழைப்பு



தோற்றம்
23
.
10
.
1936

மறைவு
09
.
05
.
2001

அமரர்

## பாலன் கிருஷ்ணபிள்ளை

(கோண்டாவில்)

கடந்த 09.05.2001 புதன்கிழமை அமரத்துவம் எய்திய, எமது அருமைத் தந்தையாரின் அந்தியேஷ்டி சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (08.06.2001) வெள்ளிக்கிழமை காலை தொடங்கி நிகழவுள்ளன. ஆகவே அக்கிரியாதிகளிற் கலந்து கொண்டு அமரரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறும், மதியபோசன நிகழ்விற் கலந்துகொள்ளுமாறும் எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்*

*பிள்ளைகள்* :- ப.கிருஷ்ணலோசனா (கனடா)
கி.கிருஷ்ணபாபு (டென்மார்க்)
கி.கிருஷ்ணராஜா (கனடா)
கி.கிருஷ்ணபிரபு
கி.கிருஷ்ணசர்மினி
*மருமகன்* :- நா.பத்மநாதன் (கனடா)
*பேரப்பிள்ளைகள்*:-ப.நிரோஜன் (கனடா)
ப.கஜானன் (கனடா)
ப.சாகரி (கனடா)

*நாவலடி,*
*உடுப்பிட்டி.*
(88719)

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருஷம் வைகாசி மாதம் 27 ஆம் நாள் (10-06-2001) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.53 மணிமுதல் 11.45 மணி வரையிலுள்ள சிங்கலக்கின சுபமுகூர்த்த வேளையில்

திருமதி வீரகத்தி - சிவபாக்கியம்
தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரன்
**சசிகுமார்**
அவர்களுக்கும்

திரு.திருமதி துரைராசா பரமேஸ்வரி
தம்பதிகளின்
கனிஷ்ட புத்திரி
**சுகந்தினி**
அவர்களுக்கும்

தெய்வத் திருவருளை முன்னிட்டு மாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்ற மேற்படி வைபவம் யாழ்.வண்ணை கேசாவில் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் குடும்ப சகிதம் சமுகம் தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*வரவேற்புபசாரம்:- 11-06-2001 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு*
*மணமகன் இல்லத்தில் நடைபெறும்.*

*தங்கள் அனைவரதும் நல்வரவை நாடும்*

திருமதி வீரகத்தி சிவபாக்கியம்
திரு.திருமதி இ.டகிலானந்தம் குடும்பம்
கோகிலாதேவி (*சகோதரி*)

*கும்பளாவளைப்பிள்ளையார் கோயிலடி,*
*அளவெட்டி.*

திரு.திருமதி துரைராசா குடும்பம் (*யாழ்*)
திரு.திருமதி சுந்தரலிங்கம் குடும்பம் (*பிரான்ஸ்*)
திரு.திருமதி குணசேகரம் குடும்பம் (*பிரான்ஸ்*)
திரு.திருமதி ஸ்ரீரூபன் குடும்பம் (*பிரான்ஸ்*)
திரு.திருமதி மனோராசா குடும்பம் (*சுவிஸ்*)
திரு.திருமதி ரூபன் குடும்பம் (*சுவிஸ்*)
செல்வி விஜயராணி (*கொழும்பு*)
செல்வன் தவசீலன் (*பிரான்ஸ்*)
செல்வி மாலினி (*பிரான்ஸ்*)

*7, காரைக்காடு லேன்,*
*வண்.மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

(88737)

(இருவீட்டார் அழைப்பு)

# பிரிட்டிஷ் மக்கள் நேற்று வாக்களிப்பு;
# பிளயரா? வில்லியமா? அடுத்த பிரதமர்?

## முடிவு பெரும்பாலும் இன்று தெரிந்துவிடும்

லண்டன்,ஜூன்8

பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தேர்லுக்கான வாக்களிப்பு நேற்று இடம் பெற்று முடிந்தது.

இந்தத் தேர்தலில் முக்கிய போட்டியாளர்களான தொழிற் கட்சித் தலைவர் ரொனி பிளயரா, கென்சர் வேட்டிவ் கட்சித் தலைவர் வில்லியம் ஹேக்கா வெற்றி பெறுவர் என்ற விவரம் அனேகமாக இன்று மாலைக்குள் தெரியவரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

659 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக நடத்தப்பட்ட இந்தத் தேர்தலில் 14 கட்சிகளைச் சேர்ந்த 3ஆயிரத்து 294 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

நேற்றுக் காலை 7.00 மணிக்கு 45ஆயிரம் வாக்களிப்பு நிலையங்களில் வாக்குப் பதிவு ஆரம்பமானது. தொடர்ந்து இரவு 10மணி வரை பதிவுகள் இடம்பெற்றன.



பிரிட்டிஷ் தேர்தலில் போட்டியிடும் முக்கிய வேட்பாளர்களான சாள்ஸ் கெனடி, ரொனி பிளயர், வில்லியம் ஹேக் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

வாக்குப் பதிவு முடிந்து வாக்களிப்பு நிலையங்கள் மூடப்பட்ட முக்கால் மணிநேரத்தில் முதலாவது முடிவு வெளியானது.

தேர்தல் முடிவுகளில் பிரதமர் ரொனி பிளயரின் தொழிற்கட்சி முன்னிலையில் இருப்பதாக முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (ம)

# இந்தியாவுக்கு எதிரான
# பாகிஸ்தான் மதத் தலைவர்களை ஜெனரல் முஷாரப் கண்டிக்கிறார்

இஸ்லாமாபாத்,ஜூன8

பாகிஸ்தானின் மதத் தலைவர்கள், இந்தியாவுக்கு எதிராகப் பொறுபற்ற வகைகளில் .கருத்துக்களை தெரிவிப்பதையும், அறிக்கைகள் வெளியிடுவதையும் நிறுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு பாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் வற்புறுத்தியுள்ளார்.



இஸ்லாமாபாத்தில் இடம்பெற்ற இஸ்லாமிய மாநாடொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இஸ்லாமிய மதத்தலைவாகள் தேசிய நலனில் பொறுப்பற்ற வகையில் நடந்து வருவதாகவும் -

இதனால் சர்வதேச சமூகம் பாகிஸ்தானை ஒரு பயங்கரவாத நாடாகக் கருதுவதாகவும் - முஷாரப் கவலை தெரிவித்தார்.

இஸ்லாமிய மதத் தலைவர்களின் அறிக்கைகள் ஏற்படுத்தியுள்ள கெடுதியான தாக்கங்களை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்று கூறிய முஷாரப், பொறுப்பில்லாத தலைவர்களின் பொறுப்பற்ற அறிக்கைகளால் பாகிஸ்தான் ஒரு பயங்கரவாத நாடாகச் சித்திரிக்கப்படுவதாகக் கூறினார்.

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக இந்தியாவுடன் பேச்சு நடத்த உள்ள நிலையில். முஷாரப்பின் உரை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

(ஒ-6-9)

உலக அரங்கில்

## ஆளுநரைத் திரும்ப அழைக்கக் கோரிக்கை

சட்டத்துக்குப் புறம்பான வகையில் ஜெயலலிதாவை தமிழக முதல்வராகப் பதவிப் பிரமாணம் செய்து வைத்த ஆளுநர் பாத்திமா பீபியை திருப்பி அழைத்துக் கொள்ளுமாறு மத்திய அரசிடம், தமிழக பாரதீய ஜனதாக் கட்சி கோரியுள்ளது.

# உறுப்புகளை மறு உருவாக்கம் செய்யும் நவீன சிகிச்சை முறை!
## இந்திய டாக்டர் கண்டுபிடிப்பு

புதுடில்லி,ஜூன்8

மனித உடல் உறுப்புக்களையும் திசுக்களையும் மறு உருவாக்கம் செய்யும் நவீன தொழில்நுட்பத்தை உலகிலேயே முதன்முறையாக இந்திய டாக்டர் ஒருவர் உருவாக்கி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லியில் உள்ள மௌலானா ஆஷாத் மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் பாலகிருஷ்ணன் வெங்கட்ராவ் மட்டக்குருத்தர் என்பவர் இந்தத் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்துள்ளார்.

இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம் உடல் உறுப்புக்கள் செயற்படாததால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு தகுந்த சிகிச்சை அளித்துக் குணமாக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)

# உலகின் அதிகூடிய வயதுப் பெண் தனது 115 ஆவது வயதில் மரணம்

உலகின் அதிகூடிய வயது வரை வாழ்ந்தவர் என்று கின்னஸில் பெயர் பதியப் பெற்றவரான மேரி பிறிமொன்ற் என்ற பிரெஞ்சுப் பெண் தனது 115 ஆவது வயதில் பிரான்ஸ் மருத்துவமனையில் காலமானதாக ஏ.எப்.பீ செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

886 ஆம் ஆண்டில் பிறந்த இவர் தனது 115ஆவது பிறந்த தினத்தை கடந்த ஏப்ரல் மாதத்தில் கொண்டாடியிருந்தார். முதலில் பாரிஸ ஒரு ரயில்நிலைய ஊழியரையும், பின்னர் ஒரு சாரதியையும் மணம் முடித்திருந்த இவருக்கு பிள்ளைகள் எவரும் இல்லை. கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் பிரிட்டிஷ் பெண் ஈவா மொறிஸ் இறந்த பின்னர் இவரே உலகின் மிகவும் மூத்த பெண்ணாக இருந்து வந்தார். (ம)

# தடைகள் நீக்கப்படாத வரை அமெரிக்காவுடன் உறவு இல்லை
## ஈரான் அதிபர் திட்டவட்டமாக அறிவிப்பு

தெஹ்ரான்,ஜூன்8

ஈரான் குடியரசுக்கு எதிரான தடைகள் நீக்கப்படாத வரை அமெரிக்காவுடனான உறவை ஏற்படுத்திக் கொள்வது குறித்து பரிசீலிக்கப் போவதில்லையென ஈரான் அதிபர் முஹமட் கதாமி அறிவித்துள்ளார்.

தெஹ்ரானில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத தெரிவித்தார்.

அமெரிக்காவின் தடைகளை எதிர்ப்பதுடன் அது விதிக்கும் முன் நிபந்தனைகளை நிராகரிப்பதாகவும் கதாமி கூறினார். அமெரிக்காவின் அடக்கியாளும் கொள்கைகளால் ஈரான் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

கதாமிக்கு எதிராகப் போட்டியிடும் இரு வேட்பாளர்களும் தாம் பதவிக்கு வந்தால் வாஷிங்ரனுடன் நல்லுறவைப் பேண போவதாக அறிவித்துள்ளனர். எனினும் ஈரான் மீதான தடைகளை உடனடியாக அகற்றும் திட்டம் எதுவுமில்லையென அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவித்திருந்தார்.

# அரபாத் ஒரு கொலைகாரர்; இஸ்ரேல் பிரதமர் குற்றச்சாட்டு

ஜெருஸலம்,ஜூன் 8

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் ஒரு கொலைகாரர். பெரும் பொய்யர். என்று இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் தெரிவித்துள்ளார்.

ஷெரோன் பிரதமராகப் பதவி ஏற்றதில் இருந்து அரபாத்தைப் பற்றிக் குறிப்பிட அவர் பாவித்த மிகக் கடுமையான சொற்கள் இவையாகும். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரபாத் ஒரு நாட்டின் தலைவரல்லர். அவர் ஒரு நாட்டின் தலைவரென சிலர் கருதுகின்றார்கள். ஆனால் அரபாத் பயங்கரவாதிகளினதும் கொலைகாரர்களினதும் தலைவராவார் - எனவும் ஷெரோன் குறிப்பிட்டார்.

ஷெரோனின் வார்த்தைகள் சமாதானத்தைக் காண உதவி புரியாது என பலஸ்தீன அமைச்சர் ருபில் சாத் தெரிவித்தார்.

நாம் ஷெரோனின் கடந்த காலத்தை ஞாபகப்படுத்த விரும்பவில்லை. பலஸ்தீன மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி என்ற முறையில் அரபாத்துக்கு ஷெரோன் மதிப்பளித்து நடக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை -

அரபாத் அறிவித்திருக்கும் யுத்த நிறுத்தம் சரியாகப் பின்பற்றப்பட்டால் பலஸ்தீனத்துக்கு உணவு மற்றும எரிபொருளை அனுப்பி வைக்க உள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது. யஸீர் அரபாத்தின் யுத்த நிறுத்தத்தை ஹமாஸ் ஏற்றுக்கொண்டதாக அறிவிக்கப்பட்டதை அவ்வியக்கம் மறுத்துள்ளது. தொடர்ந்து போராடப்போவதாகவும் அது கூறியுள்ளது. (ம)

## வாஷிங்ரன் போஸ்ட், லண்டன் ரைம்ஸ் வெளியிடும் தகவல்
# நோபாள மன்னர் குடும்பத்தை இளவரசரே சுட்டுக் கொன்றார்
## நேரில் கண்ட சாட்சிகள் தெரிவிப்பு

லண்டன்,ஜூன்8

நோபாள மன்னர் குடும்பத்தவர்களின் கொலைகளுக்கு இளவரசர் திபேந்திராவே காரணம் என்று, சம்பவம் இடம்பெற்ற போது அதனை நேரில் கண்ட மன்னரின் உறவினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான செய்திகளை அமெரிக்காவின் 'வாஷிங்ரன் போஸ்ட்' மற்றும் லண்டன் 'ரைம்ஸ்' ஆகிய பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன.

'வாஷிங்ரன் போஸ்ட்' வெளியிட்ட தகவலில் -

இளவரசர் திபேந்திரா 'உஷி சப் மெஷின் துப்பாக்கி' ஒன்றையும் 'எம் -16 அஸால்ட ரைபிள்' ஒன்றையும் பயன்படுத்தியே தனது குடும்பத்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்றும் -

சம்பவம் இடம்பெற்ற தினத்தின் இரவு உணவின் போது இளவரசரின் திருமண விடயம் குறித்து எதுவும் பேசப்படவில்லை என்றும் - மன்னரின் நெருங்கிய உறவினர் ஒருவர் தெரிவித்ததாகக் கூறியுள்ளது.

லண்டன் 'ரைம்ஸ்' வெளியிட்ட தகவலில் -

தனது குடும்பத்தவர்களைக் கொலை செய்வதற்கு முன்னர் இளவரசர் திபேந்திரா அவர்களுக்கு குடிப்பதற்குப் பானங்கள் வழங்கிக்கொண்டிருந்ததாகவும் -

பின்னர் திடீரென அங்கிருந்து நழுவி இராணுவச் சீருடையுடன் வந்து குடும்பத்தவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் -



சம்பவத்தில் உயிர் தப்பிய பெயர் குறிப்பிட விரும்பாத உறவினர் ஒருவர் சொல்லியதாகத் தெரிவித்துள்ளது.

இதேவேளை -

படுகொலைச் சம்பவம் இடம் பெற்ற சமயம் மன்னர் குடும்பத்தவர்களுடன் இருந்தவர்களில் 12 பேர் உயிர் தப்பி உள்ளதாக தனியார் தொலைக்காட்சி ஒன்று தெரிவித்தது.

(ம-6)

## உலகின் கவனத்தை ஈர்த்துள்ள பெண்



நேபாள மன்னர் குடும்பத்தவரைச் சுட்டுக் கொன்றதாகக் கூறப்படும் இளவரசர் திபேந்திராவின் காதலி தேவ்யானியே இவர். இவருக்கும் இளவரசருக்கும் இடையிலான காதல் விவகாரத்தால் ஏற்பட்ட சச்சரவே மன்னர் குடும்பப் படுகொலைக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுகின்றது.

# பத்திரிகை ஆசிரியர் உட்பட மூவர் நேபாளப் பொலீஸாரால் கைது!
## தவறான செய்தி வெளியிட்டதற்காக

காத்மண்டு,ஜூன்8

நேபாள மன்னர் குடும்பத்தவரின் படுகொலைகளுக்கு இளவரசர் திபேந்திராவே காரணம் என்று செய்தி வெளியிட்ட நேபாளப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியரும் செய்தியாளர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உள்ளூர்ப் பத்திரிகையான 'கோர்கால்' பத்திரிகையின் நிர்வாக இயக்குநரும் ஆசிரியருமான யுவராஜ் திமேரேயும் செய்தியாளர்களான கைலாஷ் ஸிரோகியா, வினோத் திவாலி ஆகியோருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

அரண்மனைக் கொலைகளுக்கு காரணம் இளவரசர் திபேந்திராதான் என்று தெரிவித்து அப்பத்திரிகை ஒரு பேட்டியை வெளியிட்டது. அந்தச் செய்தி தவறானது; மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தியது என்ற குற்றச்சாட்டுக்களின் பேரிலேயே அதன் ஆசிரியரும் செய்தியாளர்களும் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச வம்சத்துக்கு இழுக்கை ஏற்படுத்தும் செய்திகளையோ, கட்டுரைகளையோ வெளியிட வேண்டாம் என்று பத்திரிகையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக நேபாள தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் சிவராஜ் ஜோஷி தெரிவித்தார்.

ராஜ்ஜியத்தின் இறையாண்மை, ஒற்றுமை, பாதுகாப்பு மற்றும் அமைதிக்கு அச்சுறுத்தலான தகவல்களை வெளியிட வேண்டாம் என்றும் செய்தியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-6)

# ருஷ்டியின் மரண தண்டனையை விலக்க ஈரான் முன்வந்தது

தெஹ்ரான்,ஜூன்8

சர்ச்சைக்குரிய எழுத்தாளர் சல்மான் ருஷ்டிக்கு விதித்த மரண தண்டனையை விலக்க ஈரான் அரசு முன் வந்துள்ளது.

பல ஆண்டுகளின் முன்னர் 'சைறானிக் வேசஸ்' (சாத்தானின் வேதங்கள்) என்ற புத்தகத்தை ருஷ்டி எழுதியிருந்தார். அதில் இஸ்லாமிய கோட்பாடுகளையும், அவற்றைப் பின்பற்றும் இஸ்லாமியர்களையும் சல்மான் ருஷ்டி அவதூறாகக் குறிப பிட்டிருப்பதாகக் கூறி அப்போது ஈரான் அதிபராக பதவி வகித்த மதத் தலைவர் அயத்துல்லா கொமெய்னி அவருக்கு மரண தண்டனை விதித்தார். மற்றொரு இஸ்லாமிய அமைச்சர் ருஷ்டியின் தலையைக் கொண்டு வருவோருக்கு 30 லட்சம் டொலர்கள் பரிசாகத் தருவதாக அறிவித்திருந்தார்.

இதனால் ருஷ்டி பல ஆண்டுகள் தலைமறைவாக இருக்க வேண்டி இருந்தது.

ஈரானில் இன்று அதிபர் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அதிபர் கதாமி, எழுத்தாளர் ருஷ் டிக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை ரத்துச் செய்வது குறித்து பரீசீலிக்கப்படும் என்று பேட்டி ஒன்றில் கூறியுள்ளார். மதத்தின் பெயரால், சிந்தனைகளின் மீது ஆதிக்கம் செலுத்தப்படக்கூடாது என்றும் அதிபர் கதாமி கூறியுள்ளார். (ஒ)

# எண்ணெய்க் கப்பல் வெடி விபத்தில் ரொமானியாவில் 10 பேர் உயிரிழப்பு

லண்டன்,ஜூன்8

ரொமானியாவில் எண்ணெய்த் தாங்கிக் கப்பல் ஒன்றில் ஏற்பட்ட வெடி விபத்தினால் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

கருங்கடல் கரையோரத்தில் தரித்து நின்ற எண்ணெய்த் தாங்கிக் கப்பலே விபத்துக்குள்ளானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 32 ஆயிரம் தொன் எண்ணெய்யைத் தாங்கிச் செல்லக் கூடிய இந்தக் கப்பலில் உலோக ஒட்டு வேலைகள் இடம் பெற்றுக் கொண்டிருந்ததாகவும் -

இதன் போது ஏற்பட்ட விபத்தில் கப்பலின் ஒருபாகம் வெடித்துச் சிதறியதாவும் - தெரிவிக்கப்பட்டது.

விபத்தினால் ஏற்பட்ட தீயை அணைக்க தீயணைப்புப் படையினர் ஒரு மணி நேரமாக தீயுடன் போராட வேண்டியிருந்தது. (ம-6)

# பொது நிறுவனங்களின் உதவியுடன் மரம் நடும் இயக்கத்துக்கு ஏற்பாடு

வலிகாமம்தெற்கு,ஜூன்8

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட உள்ள மரம் நடும் இயக்கத்தில் பாடசாலைகள், பிரதேச செயலகங்கள், உள்ளூராட்சி சபைகள், மற்றும் சனசமூக நிலையங்கள போன்ற பொது ஸ்தாபனங்கள் பலவும் பங்குபற்ற உள்ளன.

இந்த மரநடுகை இயக்கத்துக்கான சகல ஏற்பாடுகளும், யாழ்.மாவட்ட செயலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட உள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் வேம்பு, சமண்டலை, தேக்கு போன்ற மரங்களும் பயனுள்ள பழ மரக்கன்றுகளும் நடப்பட உள்ளன.

இம்மரங்கள் பாடசாலைகளிலும், பொது நிறுவனங்களின் வளவுகளிலும், வீதிகள், பொது இடங்கள் போன்றவற்றிலும் நடப்பட உள்ளன.

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்களின் அமைச்சின் ஏற்பாட்டில் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படும். (ஜ-152)

## மீளக்குடியமரும் பகுதிகளில் திருட்டுக்கள்

சுன்னாகம், ஜூன்8

கைதடி - நுணாவில், மட்டுவில் பகுதிகளில் மக்கள் மீளக் குடியேற அனுமதிக்கப்பட்டிருக்கும் இடங்களில் தங்கியுள்ள சிலர், திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேங்காய், தளபாடங்கள் முதலியவற்றை இவர்கள் திருடி வருவதாகவும் - கட்டாக்காலியாகத் திரியும் மாடுகளைப் பிடித்து குறி சுட்டு தமது உடைமை ஆக்குவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இப் பகுதிகளில் பெரும்பாலான வீடுகள் வசிக்க முடியாதளவுக்குச் சேதமடைந்து உள்ளதால், மக்கள் பலரும் குடியமரவில்லை. இச்சந்தர்ப்பத்தை இத் திருட்டுப் பேர்வழிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஜ-27)

## தவறணையை இடம்மாற்றக் கோரிக்கை

சண்டிலிப்பாய்,ஜூன்8

சில்லாலை மேற்கில் இயங்கி வரும் கள்ளுத்தவறணையை அங்கிருந்து இடம்மாற்ற வேண்டும் என்று அப்பகுதி மக்கள் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தவறணைக்குச் சமீபமாக இந்து ஆலயம் ஒன்று இருப்பதாகவும், இப் பகுதியில் அமைதி நிலைக்குப் பாதிப்பு ஏற்படுவதாகவும், தவறணையை முன்னர் இயங்கிய இடத்துக்கு இடம்மாற்றம் செய்ய வேண்டும் என்றும் அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-135)

## ஆலோசனைக் கூட்டங்கள்

சண்டிலிப்பாய்,ஜூன்8

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் வியாபாரத்தை அதிகரித்து அவற்றை இலாபகரமான முறையில் நடத்துவதற்கான ஆலோசனைக் கூட்டங்கள் தற்போது கிளைக்குழுக்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

அண்மையில் சில்லாலைக் கிளையில் இவ்வாறான ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு, கிளையை இலாபகரமாக நடத்துவதற்கான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

ஏனைய கிளைகளிலும் இது போன்ற ஆலோசனைக் [illegible]ங்கள் நடைபெற்றுவருவதாக, [illegible] பொது முகாமையாளர் எஸ்.வை[illegible]நன் தெரிவித்தார். (ஜ-135)

## முன்னாள் சிப்பாய் விளக்கமறியலில்

மாத்தளை மாவட்டத்தின், மெதவத்தை உதவிமான கிராமத்தில் கடந்த சனிக்கிழமை ஏ.ஜி.நீலாவதி என்ற பெண்ணை தனது கைத்துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்திய முன்னாள் இராணுவச் சிப்பாய், மாத்தளை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது அவரை 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மெதவத்தை உதவிமான கிராமத்தைச் சேர்ந்த இராணுவ வீரரான நிசங்க செனவிரட்ன என்பவர் அங்குள்ள தோட்டம் ஒன்றில் மிளகாய் பறித்துக் கொண்டிருந்த 11 வயது சிறுமி ஒருவரைத் தாக்கி விட்டு கடத்திச் செல்ல முற்படுகையில் ஊரவர்கள் சேர்ந்து அவரைத் தாக்கியுள்ளனர். இவ்வேளையில் இந் நபர் சிறுமியின் தாயாரான ஏ.ஜி.நீலாவதி என்பவரை தன்வசம் இருந்த கைததுப்பாக்கியால் சுட்டுவிட்டு ஓடித் தலைமறைவாகியுள்ளார்.

படுகாயத்துக்குள்ளான நீலாவதி இரத்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

தலைமறைவான சந்தேக நபர் மாத்தளைப் பொலீஸாரிடம் பின்னர் சரண டைந்ததை அடுத்து பொலீஸார் அவரை மாத்தளை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிவான் ரஞ்சித் வத்துப்பொல முன்னிலையில் ஆஜர் செய்த போது நீதிவான் நாளை 6ஆம் திகதி வரை சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஜ)

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1930 - 05 - 08 | 1999 - 06 - 08 |

### அமரர் பெஞ்சமின் குமாரகுலசிங்கம்

**'சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்.'**

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்,
உற்றார், உறவினர்.

*நாவாந்துறை தெற்கு,*
*யாழ்ப்பாணம்.* (88762)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 04 - 10 - 1942 | 12 - 05 - 2001 |

### கணபதிப்பிள்ளை சிறிகாந்தன்

**அன்புடன் பழகிவிட்டுத் திடீரென**
**மறைந்து விட்டீரே! ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.**

எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை மறுதினம் 10-06-2001 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


முகவரி:
*மூளாய் வீதி,*
*வட்டுக்கோட்டை.*

தாய், மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள். (88668)

---

ஸ்ரீமத் விராட் விஸ்வப் ப்ரஹ்மனேநம!

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



| உதயம் | அஸ்தமனம் |
|---|---|
| 23 - 10 - 1930 | 12 - 06 - 1998 |

### அமரர்
### தம்பிஜயா பாலகிருஷ்ணன் பத்தர்

திதி: 08-06-2001

ஆண்டுகள் மூன்று பறந்தோடி விட்டன!
நினைவுகள் மட்டும் நிழலாடுகின்றன
நெஞ்சம் இருக்கும் வரை உங்கள்
நினைவுமிருக்கும்

*ஆத்மா சாந்தி அடையட்டும்!*

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*இல. 86, நல்லூர் குறுக்கு வீதி,*
*நல்லூர்.* (88784)

---

## முதலாவதுபிறந்தநாள்வாழ்த்து

HAPPY



BIRTHDAY

### செல்வன் சி.அருணோதயன்

முதலாம் கட்டை, பருத்தித்துறையைச் சேர்ந்த
**திரு.திருமதி சிவபாலன் ~ தேவகி**
**தம்பதிகளின் செல்வப் புதல்வன்**

### அருணோதயன்

**தனது முதலாவது பிறந்த நாளை இன்று (08~06~2001) வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.**

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, அம்மப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அக்காமார், அண்ணாமார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகின்றார்கள்.

~ இ.ஜெயராமன்
(மாமன்)

*முதலாம் கட்டை,*
*பருத்தித்துறை.*
**T.P 070 - 213001** (88758)

---

**யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய**

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

***காலம்:*** 05.07.2001 வியாழக்கிழமை காலை 10.00 மணி

***இடம்:*** பாடசாலை மண்டபம்

***தலைவர்:*** அருட்செல்வி G.செல்வராணி A.C.
(அதிபர்)

அனைவரையும் தவறாது பங்கு கொள்ளுமாறு
தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

(C/17026) - செயலாளர்.

---

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லையா செல்லம்மா

நுணாவில் மேற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், தபாற்கந்தோர் வீதி, பெருங்குளம் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா செல்லம்மா அவர்கள் கனடாவில் 2001.06.05 ஆம் திகதி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சச்சிதானந்தம் வசந்தாதேவி, செல்வகுமார் சாந்தாதேவி (கொழும்பு), கமலேஸ்வரன் (கனடா), தயாளந்தசோதி, லலிதாதேவி (கனடா), கமலாகரன் (கனடா), ராஜன் லோஜினிதேவி (கனடா), கமலதாஸ் (கனடா), காலஞ்சென்ற கமலகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (2001.06.08) வெள்ளிக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சாந்தாதேவி செல்வகுமார்
(மகள்)

*கொழும்பு.* (88779)

# இரு மாத நிவாரணம் ஒன்றாகக் கிடைக்கும்

## இந்த மாதம் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 8

மே, ஜூன் ஆகிய மாதங்களுக்கான இடம்பெயர்ந்தோர் உலர் உணவு நிவாரணம் இந்த மாதம் ஒன்றாகச் சேர்த்து வழங்கப்படவுள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த இரண்டு மாதங்களுக்குமான நிவாரணப் பொருள்கள் யாவும் கப்பல் மூலம் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டுள்ளதாகவும்—

இவற்றை கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்கு விநியோகிக்கும் பணி தற்பொழுது நடைபெற்று வருவதாகவும்—

யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

[ஐ-4]

# இடம் பெயர்ந்து தங்கியிருந்த இடங்களிலேயே நிவாரணம்

## செயலக அறிவிப்பால் மக்கள் குழப்பம்

கோண்டாவில், ஜூன் 8

நல்லூர், யாழ்ப்பாணம் பகுதிகளில் கடந்தகாலவன் செயல்களைத் தொடர்ந்து, இடம் பெயர்ந்து சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுகளில் தங்கியிருந்தவர்களுக்கான மே மாதத்திற்கான நிவாரணம் அவர்கள் இடம் பெயர்ந்து முன்பு தங்கியிருந்த பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே வழங்கப்படவுள்ளதாக, யாழ். செயலகம் அறிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியேறியதைத் தொடர்ந்து பங்கீட்டுஅட்டைகளும் சொந்த கிராம அலுவலர் பிரிவுகளுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில் மீண்டும் பழைய இடங்களில் நிவாரணத்தைப் பெறும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் வீணே அலையவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக ,விசனம் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-86)

# பதிற்றுப்பத்து அந்தாதி நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஜூன் 8

யாழ். பல்கலைக்கழக இந்துமன்ற ஆதரவில் இடம்பெறும் ஸ்ரீ புலோலி பசுபதீஸ்வரர் பதிற்றுப்பத்து அந்தாதி நூல் அறிமுக விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கச் சைவச் சிறுவர் இல்லப் பிள்ளைகளுக்கான சிறப்புக் கொடை நிதிக்காக இந்த நூல் வெளியிடப்படுகின்றது.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபால கிருஷ்ணஐயர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும் பல்கலைக்கழக மூதவை உறுப்பினர் அ. சோமசுந்தரம் பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ள உள்ளனர்.

நூல் அறிமுகவுரையை இந்து நாகரிகத்துறைசிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி இ. கலைவாணியும் சிறப்புரைகளை யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸும் இந்த நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ப. கணேசலிங்கமும் நிகழ்த்துவர் பதிலுரையை ஜப்பான் கச்சுயின் பல்கலைக்கழக வருகை ஆய்வாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்துவார்.

(ம)

# சமய சந்நிதிகளில்

வலிகாமம் தெற்கு, ஜூன் 8

யாழ். வண்ணார்பண்ணை காட்டுத்துறை அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாள்களுக்கு உற்சவம் நடைபெறவுள்ளது.

விசேட உற்சவங்களாக 15 ஆம் திகதி தண்டிகைத் திருவிழா, 18 ஆம் திகதி சப்பறத் திருவிழா, 19 ஆம் திகதி தேர் உற்சவம், 20 ஆம் திகதி தீர்த்த உற்சவம், 21 ஆம் திகதி சண்டேஸ்வரர் உற்சவம் என்பன நடைபெறும்.

[ஐ-152]

★ ★ ★

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலய இராஜகோபுர கும்பாபிஷேக கருமங்கள், இன்று காலை முதல் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எண்ணெய்க் காப்பு வைத்தல்நடைபெறும்.

மறுநாள் திங்கட்கிழமை பகல் 8.30 மணிமுதல் இராஜகோபுர மூலஸ்தான பரிவார மூர்த்திகளுக்கு கும்பாபிஷேகம் நடைபெறும்.

(ம-28)

★ ★ ★

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலயத்தில் வைகாசிப் பொங்கல் மடைநாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும்.

(27)

# பெற்றோரை சமுகம் தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 8

வடபகுதியில் கைது செய்யப்பட்டுக் காணமாற்போனவர்களின் பெற்றோர்களுக்கான சந்திப்பு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இராசாவின்தோட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தச் சந்திப்பில் காணாமற்போனவர்களின் பெற்றோர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் ப. செல்வராசா கேட்டுள்ளார்.

(ம-5)

# உருவப்படம் திரைநீக்கம்

சுழிபுரம் வடக்கு சம்பு நாதர் சிவாலய மடத்தில் அமரர் யோகி. க. கார்த்திகேசுவின் உருவப்படம் இன்று வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்கு திரை நீக்கம் செய்யப்படவுள்ளது.

(ம-28)

# இந்துருவலி, றுகுணு வருகின்றன

இடம்பெயர்ந்தோர் நிவாரண விநியோகத்துக்கான அரிசி மற்றும் தனியார் துறையினருக்கான பொருள்களுடன் இந்துருவலி, றுகுணு ஆகிய கப்பல்கள் இவ்வாரம் காங்கேசன்துறையை வந்தடையும் என யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

றுகுணு கப்பலில் நாலாயிரத்து ஐந்நூறு மெற்றிக்தொன் அரிசியும், இந்துருவலி கப்பலில் 800 மெற்றிக்தொன் அரிசியும், தனியார் துறையினருக்குச் சொந்தமான ஒரு தொகுதி பொருள்களும் ஏற்றி வரப்படுகின்றன.

(உ-4)

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி. வடக்கு, ஜூன் 8

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் தாச்சிச்சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

★ வசந்த ஸ்ரீ விளையாட்டுக் கழகம் எதிர் ஸ்ரீ மீனாட்சி விளையாட்டுக் கழகம்.

(ஐ-86)

★ ★ ★

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பாடசாலை அணிகளிடையேயான சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் 17 வயதுப் பிரிவில் நடைபெறும் ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி மோதுகின்றது.

(ஐ-86)

★ ★ ★

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏயினால் நடத்தப்பட்டு வரும் — முன்பள்ளிகளுக்கு இடையிலான— விளையாட்டு நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பளை பிரதேச செயலர் எஸ். புத்திசிகாமணி கலந்துகொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏயினால் நாவாந்துறை, அரியாலை, திருநெல்வேலி, பளை ஆகிய இடங்களில் நடத்தப்பட்டு வரும் முன்பள்ளி நிலையங்களைச் சேர்ந்த சிறார்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

(உ-4)

★ ★ ★

தேசிய இளைஞர்சேவைகள் மன்ற யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனம் நடத்தும் பிரதேச இளைஞர் கழக சம்மேளனங்களுக்கிடையிலான விளையாட்டு விழாவில் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் 10 ஆயிரம் மீற்றர், 3 ஆயிரம் மீற்றர் ஓட்டப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையிலான போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற வீரர்கள் இதில் பங்குபற்றவுள்ளனர்.

(ஐ-4)

(மற்றொரு செய்தி 8 ஆம் பக்கத்தில்)

# பாவனையாளர் பாதுகாப்பு சங்கங்கள் நிறுவ ஏற்பாடு

## பிரதேச ரீதியாக உறுப்பினர் தெரிவு

யாழ். மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவுகள் தோறும் பாவனையாளர் பாதுகாப்புச் சங்கங்கள் அமைக்கும் முன் முயற்சி நடவடிக்கைகளில் விலைக்கட்டுப்பாட்டுத் திணைக்களம் ஈடுபட்டு வருகின்றது.

கிராம அலுவலர் பிரிவுக்கு ஒருவர் என்ற ரீதியில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் இச் சங்கங்கள் அமைக்கப்படவுள்ளன. தொடர்ந்து கிராம அலுவலர் பிரிவு ரீதியாகவும் இச் சங்கங்கள் அமைக்கப்படும்.

15 வருடங்களுக்கு முன்னர் இச் சங்கங்கள் யாழ். மாவட்டத்தில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-86)

# கோப்பாய்ச் சந்திப் பகுதியில் போக்குவரத்துக்கு நெருக்கடி

கோப்பாய், ஜூன் 8

கோப்பாய்ச் சந்திக்கு அருகில் கடந்த சில வாரங்களாக கூடிவரும் சந்தையினால் அப்பகுதியில் வீதிப் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு வருகிறது.

தென்மராட்சியில் இருந்து எடுத்து வரப்படும் பொருள்கள் இப்பகுதியில் வைத்து விற்பனை செய்யப்பட்டு வருவதால் தினமும் அங்கு மக்கள் கூடுகின்றனர். இதனால் அவ்விடத்தில் வாகனப் போக்குவரத்துக்கும் இடைஞ்சல் ஏற்பட்டு வருகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் தலையிட்டு மாற்று ஒழுங்கை ஏற்பாடு செய்யவேண்டும் என பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-72)

# மாகாண விளையாட்டு அணிகளில் யாழ். வீரர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 8

வடக்கு—கிழக்கு மாகாண வலைப்பந்தாட்ட அணிக்கு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட அணியிலிருந்து இம்முறை ஏழு வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

வடக்கு—கிழக்கு மாகாணத்திலிருந்து இந்த அணிக்காக மொத்தம் 13 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் யாழ். மாவட்ட அணியிலிருந்து தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

எஸ்.அஜந்தா, பி.மைதிலி, எஸ்.உகாயினி, எம்.மாலினி, ரி. சங்கீதா, பி. சாந்தினி, எஸ். சிவகௌரி.

இந்த அணிக்கு வவுனியா, திருகோணமலை, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து தலா 2 பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை வடக்கு— கிழக்கு மாகாண கூடைப்பந்தாட்ட (பெண்கள்) அணிக்கு யாழ். மாவட்டத்திலிருந்து க.மிதிலா, ஆர்.நிஷாந்தி ஆகியோரும்—

உதைபந்தாட்ட அணிக்கு ஏ. றொட்ணி மார்ஷல், எஸ். சபா ஆனந்த், இ. இமானுவேல் ஆனல்ட் ஆகியோரும் தெரிவாகியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் விரைவில் திருகோணமலைக்குச் சென்று அங்கு நடைபெறும் ஒருங்கிணைந்த பயிற்சியில் கலந்துகொண்ட பின்பு எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள மாகாணங்களுக்கிடையிலான போட்டியில் பங்குபற்றுவர் என யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி எவ். ஜே. எல். ரூபசிங்கம் தெரிவித்துள்ளார்.

## பாடசாலைகளை விட்டு

# இடையில் விலகிய மாணவருக்கு கட்டாயக் கல்வித் திட்டம்

பாடசாலையை விட்டு இடையில் விலகிய அல்லது பாடசாலைக்கே செல்லாத மாணவர்களை மீண்டும் பாடசாலைகளில் இணைத்து கல்வி போதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக வலிகாமம் கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் வி. இராசையா தெரிவித்துள்ளார்.

இத்தகைய மாணவர்களுகு உரிய பயிற்சிகள் வழங்கப்பட்டு, கட்டாயக் கல்விச் சட்டத்திற்கு அமைவாக மீண்டும் பாடசாலைகளில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் —

இதற்கான வள அணியினரைத் தெரிவு செய்ய வேண்டியுள்ளதால் இவை தொடர்பான விவரங்களை வலிகாமம் கல்வி வலயத்தில் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும்—

விரும்பியோர் உடனடியாகத் தொடர்பு கொண்டு விண்ணப்பத்தைப் பெற்று எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என்றும்—

அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ)

## மீனவர் அத்துமீறலைத் தடுக்க

# இலங்கை-இந்திய நாடுகளின் கடற்படைகள் கூட்டுரோந்து

இலங்கை மற்றும் இந்தியக் கடற்பரப்புகளில் இருநாட்டு மீனவர்களும் அத்துமீறி மீன் பிடிப்பதில் ஈடுபடுவதைத் தடுக்கும் நோக்குடன் இணைக்குழுவொன்றை அமைப்பதற்கு இரண்டு நாடுகளும் தீர்மானித்துள்ளன.

அத்துமீறி மீன்பிடிக்கும் மீனவர்களைக் கண்காணிப்பதற்காக இரு நாடுகளும் இணைந்து கடற்படை ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுவதற்கும் இணக்கம் கண்டுள்ளன என்று மீன்பிடியியல் துறை அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 51 இந்திய மீனவர்களுக்கும் இந்தியச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 63 இலங்கை மீனவர்களுக்கும் மன்னிப்பு வழங்குவது தொடர்பாகப் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(உ-10)

# மன்னர் குடும்பப் படுகொலையில் இன்னும் அவிழாத மர்ம முடிச்சுக்கள்

பிரிட்டிஷ் இளவரசி டயானா வின் அகாலமரணம் 20ஆம் நூற்றாண்டின் இறுதியில் உலகைப் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. அதற்குப்பின்னர் 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகை உறைய வைத்துள்ளன நேபாள மன்னர் குடும்பத்தின் படுகொலைகள்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு உணவின போது மன்னர் பிரேந்திரா, ராணி ஐஸ்வர்யா உட்பட அரச குடும்பத்தினர் பூண்டோடு அழிக்கப்பட்டதாக வெளியான செய்தி உலகிற்கு அதிர்ச்சியளித்தது. எனில், பட்டத்து இளவரசர் திபேந்திராவாலேயே அரச குடும்பத்தவர்கள் கொல்லப்பட்டனர் என்ற தகவல் அதிர்ச்சியை பேரதிர்ச்சியாக்கியது.

ஆனால் இந்த விவகாரம் தரும் அதிர்ச்சிகள் இத்துடன் முடியப்போவதில்லை என்பதற்கு நேபாள மக்கள் எழுப்பும் சந்தேகங்கள் கட்டியம் கூறுகின்றன.

மன்னர் குடும்பத்தின் பூண்டோடு அழிக்கப்பட்டனர். கொலைகளைச் செய்ததாகக்கூறப்படும் பட்டத்து இளவரசரும் தன்னைத்தானே சுட்டுக் கொண்டு, இரண்டு நாள்கள் 'கோமா' நிலையில் மன்னராக அறிவிக்கப்பட்டவருமான திபேந்திரா கடந்த திங்கள் இறந்துவிட்டார். அத்துடன் காயமடைந்திருந்த இளவரசர் திரேந்திராவும் (மன்னரின் கடைசித் தம்பி) இறுதியில் காலமானார்.

இவற்றால், அரசுரிமையைத் தட்டிப்பறிக்கத் திட்டமிட்டு செயற்படுத்தப்பட்ட சதிச்செயலே அரண்மனைப் படுகொலைகள் என்று நேபாள மக்கள் கருதுகின்றனர்.

அவர்களின் எண்ணம் சரிதான் என்பதை நிருபிப்பது போலத்தான், தொடரும் நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

அரண்மனையில் நிகழ்ந்த துர்ப்பாக்கியச் சம்பவத்தில் இறந்தவர்களின் சரியான எண்ணிக்கை இதுவரை அறிவிக்கப்படாமல் மர்மமாகவே உள்ளது.

இயந்திரத் துப்பாக்கி தானாக வெடித்து அனைவரும் பலியானதாக புதிய மன்னர் ஜியானேந்திரா கூறியிருந்தார். இயந்திரத்துப்பாக்கி தானாகக் குண்டுகளைக் கக்கியது என்பதை நம்ப நேபாள மக்கள் தயாராக இல்லை.

ஏ.கே.47 போன்ற துப்பாக்கிகள் தானியங்கித்திறன் கொண்டவையாக இருந்தபோதும், யாராவது விசையை இழுத்த பின்னரே தானாக அவை குண்டுமழை பொழியும். அரண்மனையில் இப்படி இயந்திரத்துப்பாக்கியை இயக்கியது யார்? என்ற கேள்விக்குத் திடமான பதிலை இதுவரை அரசத் தரப்பு தெரிவிக்கவில்லை. பட்டத்து இளவரசர் திபேந்திராதான் அரச குடும்பத்தினரைச் சுட்டுக் கொன்றதாகக் கூறிய நேபாள மந்திரி இராம் சந்திர பவுடெல் பின்னர், தான் அப்படிக்கூறவில்லை என்று மறுத்திருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

முதலில் தற்கொலை செய்து இறந்ததாகக் கூறப்பட்ட பட்டத்து இளவரசர், உயிருடன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டதும் -

அவர் இயந்திரத் துப்பாக்கி ஒன்றைக் கையில் ஏந்திப் பார்வையிடும் பழைய புகைப்படம் சம்பவத்தன்றே பரவலாக செய்திப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டதும் -

சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன.

## கூட்டுச்சதியா?

இவை ஒருபுறமிருக்க பிரதமர் ஜி.பி.கொய்ராலா, புதியமன்னர் ஜியானேந்திரா அவரது மகன் பராஸ்ஷா ஆகியோரின் கூட்டுச்சதியே அரச குடும்பப் படுகொலைகள் என்று பெரும்பாலான நேபாள மக்கள் கருதுகின்றார்கள்.

பரஸஷா மீது நேபாள மக்களுககு



என்றுமே நல்ல அபிப்பிராயம் இருந்ததில்லை. அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி பரஸ்ஷா உல்லாசப்பேர்வழியாக தறிகெட்டு நடந்திருக்கிறார். கண்ணியமற்ற முறையில் நடந்ததற்காக அவரது இளவரசர் பட்டம் கூட சமீபத்தில் மன்னர் பிரேந்திராவால் பறிக்கப்பட்டது.

இதைப்போலவே நேபாளப் பிரதமர் கிரிதர் பிரசாத் கொய்ராலாவின் கதையும்.நேபாள காங்கிரஸ் கட்சித்தலைவரான கொய்ராலா மீது சமீபகாலமாக பல ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்திருந்தன. அவர் பதவி விலக வேண்டும் என்றும் கோரிக்கைகள் வலுத்து வந்தன. இந்த நிலையில், ஜியனேந்திரா, பரஸ்ஷா, கொய்ராலா ஆகியோரின் கூட்டுச்சதியே இது என்று ஒரு சாரார் கருதுகின்றனர்.

இவர்கள் மூவர் மீதும் அளவு கடந்த ஆத்திரமடைந்துள்ள மக்கள், ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர். அப்போது இந்த மூவரையும் நாடு கடத்தும்படி கோஷம் எழுப்பப்பட்டது.

எது எப்படியோ, நேபாள அரச குடும்பப் படுகொலைகள் தொடர்பாக பல புதிர்கள் அவிழ்க்கப்படாத மர்ம முடிச்சுக்களாகவே உள்ளன.

☆ மன்னர் குடும்பத்தைச் சுட்டது யார்? இயந்திரத் துப்பாக்கி தானாகச் சுட்டது என்றால் அதனை இயக்கியது யார்?

☆ பட்டத்து இளவரசர் திபேந்திரா தந்தை, தாய் உட்பட அரச குடும்பத்தைச் சுட்டுவிட்டுத் தற்கொலை செய்திருந்தால் அவரது முதுகில் எப்படி சூட்டுக்காயம் ஏற்பட்டது?

☆ இந்தக் கோரச்சம்பவம் இடம்பெற்ற அன்றிரவு, ஜியானேந்திரா காத்மண்டுவிலிருந்து பல கிலோ மீற்றர்களுக்கு அப்பால் போக்ரா என்ற சுற்றுலா நகரில் உள்ள அரண்மனையில் தங்கியிருந்தார். ஆனால் பரஸ்ஷாவும் அவரது மனைவி கோமளா ஆகியோர் இரவு விருந்தில் கலந்துகொண்டனர். ஆனால் மன்னரின் குடும்பத்தவர் அனைவரும் கொல்லப்பட்டபோதும் பரஸ்ஷா சிறு காயம் கூட இல்லாது அவரது மனைவி கோமளாஷா சுண்டுவிரலில் சிறு காயத்துடன் தப்பியது எப்படிச் சாத்தியமானது?

அரண்மனைச் சம்பவத்தில் இறந்ததாகக் கூறி, மேலும் இரு சடலங்கள் ஞாயிற்றுக்கிழமை தகனம் செய்யப்பட்டன. அந்தச் சடலங்கள் எவருடையவை?

இவ்வாறு எழும் பல கேள்விகள் பல புதிர்களாகவே தொடர்கின்றன. இறந்தவர்களின் எண்ணிக்கை இது வரை உத்தியோக பூர்மவமாக அறிவிக்கப்படவில்லை. அரண்மனையில் விருந்து நடந்த இடத்தில் பணியாளர்களும், மெய்ப்பாதுகாவலர்களும் இருந்தபோதும் அவர்கள் எவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவில்லை. ஆகவே அவர்கள் காயமின்றித் தப்பியதாகவே கருதவேண்டியுள்ளது. அப்படியானால் அவர்கள் மீது கீறலைக் கூட ஏற்படுத்தாமல், அத்தனை குண்டுகளும் அரச குடும்பத்தவர் மீது மட்டும் பாய்ந்திருக்கின்றன இது எப்படி சாத்தியம்?

**- பாமரன் -**

விருந்து நடந்தபோது இருந்த அவர்கள் தற்போது எங்கிருக்கிறார்கள் என்பது தெரியவில்லை அல்லது மறைக்கப்பட்டுள்ளது.

இவையனைத்தையும் விட நேபாள அரண்மனைக்கு அஞ்சலி செலுத்தச் சென்ற பொதுமக்களை அரண்மனைக்குள் நுழையவிடாமல் காவலர்கள் தடுத்துள்ளனர். இவை யாவும் நேபாள அரசகுடும்பப் படுகொலைகளின் பின்னணியில் சதித்திட்டம் இருக்கக்கூடும் என்ற நேபாள மக்களின் சந்தேகத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளன.

இயற்கையின் மர்மங்கள் நிறைந்த பனிமலைகளையும், மலைக்காடுகளையும் கொண்ட நேபாளத்தின் மன்னர் குடும்பத்தின் மரணங்களும் அவிழாத மரணமுடிச்சுக்களாகவே இருந்துவிடப்போகின்றனவா?

காலந்தான் விடைசொல்ல வேண்டும். ✪

## 90 நிமிட நேரத்தில் என்ன நடந்தது?

**அரச மாளிகையில் விருந்தின் போது ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தைத் தொடர்ந்து இளவரசர் திபேந்திரா குடிபோதையில் கடும் ஆத்திரத்துடன் மண்டபத்தை விட்டு வெளியேறினார். பின்னர் 90 நிமிடங்கள் கழித்து மீண்டும் அங்கு வந்திருக்கிறார்.**

**போகும் போது சாதாரண உடையில் சென்ற திபேந்திரா திரும்பி வந்தபோது இராணுவச் சீருடையில் வந்தது எப்படி?**

**நிறைபோதையில் தள்ளாடியபடி இருந்த அவரால் இராணுவச் சீருடையை மற்றவர் உதவி இன்றி எப்படி அணியமுடிந்தது? அவருக்கு உதவிய வர்கள் யார்? அந்தத் 90 நிமிட இடைவெளியில் என்ன நடந்தது?**

**சம்பவம் நடந்தபோது மன்னரின் மெய்க்காவலர்கள் அங்கு இருந்துள்ளார்கள். அவர்கள் திருப்பித் தாக்காமல் இருந்தார்களா?**

## அவசர கலந்துரையாடல்

கொழும்புத்துறையிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர்தலுக்கான கலந்துரையாடல் ஈ.பி.டி.பியின் வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவரும், இந்து சமய விவகாரங்களுக்கு பொறுப்பானவருமான திரு. ந. திரிலோகநாதன் தலைமையில் நடைபெற உள்ளதால் அனைத்து மக்களையும் தவறாது சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

**இடம்: ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் ஆலய முன்றில்**

**காலம்: நாளை (09.06.2001) சனிக்கிழமை காலை 10 மணி (மு.ப.)**

*கொழும்புத்துறை இடம்பெயர்ந்தோர் நலன்புரிச்சங்கம்.*

\- செயலாளர்.

(88801)

# மாதாந்தம் பருவகாலச் சீட்டுகள் நேரகாலத்துடன் கிடைப்பதில்லை

## பாடசாலை மாணவர்கள் பாதிப்பு

அச்சுவேலி,ஜூன்8

பாடசாலை மாணவர்களுக்குகான பிரயாணப் பருவகாலச் சீட்டுக்களை விநியோகிப்பதில் ஏற்படும் தாமதத்தால் மாணவர்கள் தேவையற்ற செலவை எதிர் கொள்வதுடன் பல்வேறு சிரமங்களுக்கும் உள்ளாகின்றனர்.

மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதற்காக மிகக் குறைந்த சலுகைக் கட்டணத்தில் வடபிராந்திய போக்குவரத்துச் சபை பருவகாலச் சீட்டுக்களை விநியோகித்து வருகின்றது.

ஒவ்வொரு மாதத்தின் ஆரம்பத்திலும் பருவச் சீட்டுக்களை விநியோகிப்பதில் தாமதம் காட்டப்படுவதாக மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் மாதத்தின் ஆரம்ப நாளகளில் தாம் சாதாரண பஸ் கட்டணத்தைச் செலுத்தியே பாடசாலைக்குச் செல்ல வேண்டி உள்ளதாகவும் -

இந்த நாள்களில் பஸ் ரிக்கெற்றுக்கும் பருவகாலச் சீட்டுக்கும் எனத் தாங்கள் இரண்டு கட்டணங்களைச் செலுத்த வேண்டி இருப்பதாகவும் -

மாணவர்கள் முறையிடுகின்றனர்.

உதாரணமாக அச்சுவேலியில் இருந்து சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்குச் சென்று வருவதற்கான ஒரு மாத பருவகாலச் சீட்டின் கட்டணம் 59 ரூபா. ஆனால் இதே தூரத்துக்கான சாதாரண பஸ் கட்டணமும் போகவர 30 ரூபா.

எனவே அச்சுவேலியில் உள்ள சுண்டுக்குளி மாணவி ஒருத்தி தனது பாடசாலைக்குச் செல்வதற்கு மாதத்தின் ஆரம்ப நாள்களில் பருவ காலச் சீட்டுக்களுக்கு சாதாரண பஸ கட்டணத்துக்கும் பணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

பருவகாலச் சீட்டுக்கள் தாமதமாகக் கிடைப்பதாலேயே இந்த நிலை ஏற்படுவதாகக் சுட்டிக் காட்டப்படுகின்றது.

1990 ஆம் ஆண்டுக்கு முன்பு வரை இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களே குறித்த தினங்களில் பாடசாலைகளுக்குச் சென்று பருவகாலச் சீட்டுக்களை வழங்கி வந்தனர்.

ஆனால் தற்போது பாடசாலை நிர்வாகமே பருவகாலச் சீட்டுக்களைப் பெற்று மாணவர்களுக்கு விநியோகிக்க வேண்டும் என்று வட பிராந்தியப் போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது. பாடசாலைகளில் போதிய ஆளணி வசதி இல்லாததனால் உரிய நேரத்தில் பருவகாலச் சீட்டுக்களைப் பெற்று மாணவர்களுக்கு விநியோகிக்க முடியவில்லை என்று பாடசாலைகளின் நிர்வாகங்கள் தெரிவிக்கின்றன.

(ஐ-ம-11)

## பிரிவுபசார விழா

கோப்பாய் சுற்றயல் கூறு மருத்துவமனையில் கடந்த பல வருடங்களாகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் வைத்திய அதிகாரி ஜி. மகாலிங்கம், மருந்தாளர் வசந்த குமார் குறூஸ், குடும்பநல சேவையாளர் எலிசபெத்தம்மா ஆகியோரது பிரிவுபசார விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ரி.இராஜசேகரன் தலைமையில் மருத்துவமனை பொதுமண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-72)

யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
*The Jaffna Education Centre*
*(சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்)*

Spoken English
With Grammar
A/L English
**சிங்களம்**
Short hand Typing
ஆகிய பாடங்கள்
இரு மொழிகள் மூலமும்
கற்பிக்கப்படுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம்:- 9.6.2001
*Director*
(88781) Loganayaki.

## மரண அறிவித்தல்

### திருமதி ஆறுமுகம் தங்கம்மா

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி நுணாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் தங்கம்மா நேற்று முன்தினம் (06-06-2001) புதன்கிழமை நள்ளிரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தர்மராஜா (முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி), சிதம்பரநாதன் (ஓமான்), Dr.கணேசராஜா (ஓமான்). ஜெயபாலன் (கிளிநொச்சி), தவபாக்கியம், தங்கராணி, புஷ்பராணி, வசந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயலஷ்மி (முன்னாள் ஆசிரியை, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி - ஆஸ்திரேலியா), தில்லைநாதன் (நுணாவில் கிழக்கு), வதனி, வாசுகி, யோகேஸ்வரன் (B.M.C. யாழ்ப்பாணம்), பேரின்பநாயகம் (உதயன் ஆசிரியபீடம்), சண்முகராஜா (வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்பு மாமியும், திருமதி அருணாசலம் சரஸ்வதி (அற்கின்சன் றோட், வட்டுக்கோட்டை), காலஞ்சென்றவர்களான குமாரசாமி இரத்தினேஸ்வரி, சிதம்பரப்பிள்ளை அப்புத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாஸ்கரன், ரமா, வித்யா, சுகந்தி, அரவிந்தன், முகுந்தன், சோபிகா, சிந்துஜன், ஜலனி, ஷயான், விஜித், அஜித், கபில்ராஜ், சாரங்கன், லக்சுமிகாந்தன், சுமித்திரா, உமாகாந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08-06-2001) வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு வட்டு.கிழக்கு சித்தன்கேணி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
பொ.யோகேஸ்வரன் (மருமகன்)
[*கட்டடப்பொருள்கள் கூட்டுத்தாபனம்* (B.M.C.), யாழ்ப்பாணம்]

C/O கே.பொன்னம்பலம்,
*வட்டு.கிழக்கு,*
*சித்தன்கேணி.*
*(வட்டு.இந்துக் கல்லூரிக்கு அருகில்)*

(C/17028)

சட்ட திட்டங்களைப் பின்பற்றுவதில் அசட்டை

# புதிய கட்டடங்கள் அமைக்க முன் அனுமதி பெறவேண்டும்

## மாநகரசபை அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்8

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் புதிதாக அமைக்கப்படும் கட்டடங்களுக்கு சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.

இவ்வாறு மாநகர சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற அனேகமான திணைக்களங்கள், பாடசாலைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் மருத்துவமனை போன்ற நிறுவனங்கள் தமக்குத் தேவையான கட்டடங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன.

ஆனால் இந்தக் கட்டடங்கள் அமைக்கப்படுவதற்கு முன் அதற்கு யாழ்.மாநகர சபையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியது அவசியமாகும்.

இதுகுறித்து மேற்குறிப்பிட்ட திணைக்களங்களின் அதிகாரிகள் அக்கறையின்றி இருக்கின்றனர்.

மாநகர சபையின் சட்ட திட்டங்களுக்குத் கட்டுப்படுவதில் இவர்கள் அசிரத்தைப் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர். பொதுமக்களின் நன்மை கருதி மாநகர சபை செய்யும் சில விட்டுக்கொடுப்புகளை இவர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றனர். - என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-5-9)

## வாழ்த்தி வரவேற்கின்றோம்

மக்கள் வங்கி யாழ்.பிராந்திய முன்னாள் முகாமையாளர்

**உயர்திரு.சி.இளம்பிறைநாதன்** அவர்கள்

பதவி உயர்வு பெற்று மக்கள் வங்கி வடவலய உதவிப் பொது முகாமையாளராக பொறுப்பேற்பதையிட்டு எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து அவரை வருக வருகவென வரவேற்கின்றோம்.

வாழ்த்தி வரவேற்பவர்:
பைந்தமிழ் வெதுப்பகம்,
சாவகச்சேரி.

(சி17034)

## வீட்டுக் கிருத்திய அழைப்பு



*24-05-2001இல் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்*
சிற்பச் சக்கரவர்த்தி, கலாபூஷணம்
ஸ்தபதி **ஆறுமுகம் ஜீவரட்ணம்** ஆச்சாரியார்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று வில்லூன்றியில் நடைபெற்றன. நாளை (09-06-2001) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு:** *தயவுசெய்து இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும் வண்ணம் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.*

*ஆறுமுகம் சிற்பாலயம்,*
*திருநெல்வேலி மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*

அன்பு மனைவி, மக்கள்,
சகோதரர்கள்.

(88813)

## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் விமலசிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்,
சண்டிலிப்பாய் கிராமசபைத் தலைவர் )

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் விமலசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்று (07.06.2001) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் காலமாகிவிட்டார்.

அன்னார் புஸ்பராணியின் அன்புக் கணவரும், விமலராஜ் (இ.போ.ச, வவுனியா), சோமநாத் (பிரான்ஸ்), செல்வசுதா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற தேவிகாராணியின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற அன்னப்பிள்ளை சோமசுந்தரத்தின் (மாவிட்டபுரம்) மருமகனும் நிர்மலாதேவி, கலாதேவி, இரத்தினராசா (வலயம் வலிகாமம் மருதனார்மடம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவபாதசுந்தரம் சிவராசா கந்தசாமி, திருஞானம், ஈஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், விஜயகுகன், யசோக்குமார், விதுசன், அபிதாஅனி, ஜெனுஷா, ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முகவரி:*
"சுந்தரபவனம்",
*சண்டிலிப்பாய்.*

தகவல்:
கு.இரத்தினராசா
(மருமகன்)

(88812)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூன்8

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையால் நடத்தப்படவுள்ள பத்திரிகைத் துறைப் பயிற்சியாளர்களுக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை 10 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக கூட்டுறவுச்சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(உ-4)

## மட்டுவில் மாணவருக்கு!

யாழ்ப்பாணம்.ஜூன்8

தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை ஆகியவற்றுக்கு விண்ணப்பிக்க விரும்பும் மட்டுவில் தெற்கு, அ.மி.த.க. பாடசாலை மாணவர்களை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலைக்கு எதிர்வரும் திங்கட்கிழமை சமுகமளிக்குமாறு மட்டுவில் தெற்கு அ.மி.த.க. பாடசாலை அதிபர் க.மயில வாகனம் கேட்டுள்ளார். (உ)

## சடலத்தை கையளிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்8

ஆனைக்கோட்டைப் பகுதியில் கடந்த மூன்றாம் திகதி இரவு இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்டதாகத் தெரிவித்து யாழ்.ஆஸ்பத்திரியில் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்ட - விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் எனக் கருதப்படும் இளைஞரின் - சடலத்தை விடுதலைப் புலிகளிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சடலத்தை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு எடுத்துச் சென்று, விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-15-139)

## தமிழ் விழா

கோப்பாய்,ஜூன்8

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழ் விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி சபாபதி நாவலர் அரங்கில் தலைவர் கு.செந்தில்குமரன் தலைமையில் நடைபெற உள்ளது.

பிரதம விருந்தினராக கவிஞர் இ.முருகையனும் சிறப்பு விருந்தினராக 'மனோ லைட்' உரிமையாளர் இ.மனோகரனும் கலந்து கொள்வர். (ஐ-72)

## அங்குரார்ப்பண கூட்டம்

கோப்பாய்.ஜூன்8

ஊரெழு கணேச வித்தியாசாலை பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு பாடசாலை பொது மண்டபத்தில் பாடசாலை அதிபர் இ.குலசிங்கம் தலைமையில் நடைபெற உள்ளது. (ஐ-72)


மாதாந்தப் பரீட்சை - மே
தரம் 1 முதல O/L வரை
ஆரம்பம்: 10 -06 -2001
(ஞாயிறு)
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
(88814)

ராஜா யாழ்ப்பாணம்
பிரசாந்த், கரண்,
சிம்ரன், விவேக்
மற்றும் பலர் நடிப்பில்
கண்ணெதிரே தோன்றினாள்
தினசரி காட்சிகள : 10.30, 2.30 (புதியநேரம்)
சனி, ஞாயிறுகளில் :10.30, 2.00, 5.00 (பு.நே.)
15.06.2001 முதல்
சிட்டிசன்

நாகம்ஸ்
சுன்னாகம்
அர்ஜூன், அபிராமி,
பிரகாஷ்ராஜ் நடித்த
வானவில்
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30 (புதிய நேரம்)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஊர்காவற்றுறை புளியங்கூடல் செருத்தனைப்பதி
ஸ்ரீ மகாமாரி அம்மாள் தேவஸ்தான பிரதமகுரு

**சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள் அவர்கள்**

சர்வதேச இந்து மத குரு பீடாதிபதியாக பதவியேற்றதை இட்டு மேற்படி ஆலய மஹோற்சவ கொடியேற்ற தின நன்னாளில் அவரைப

**பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

*புளியங்கூடல்,*
*ஊர்காவற்றுறை.*

ஆலய தேவஸ்தான அறங்காவலரும
தேர்த்திருவிழா உபயகாரரும்.

(88808)

## அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

### வல்வெட்டித்துறை

### இராசகோபுரம் வர்ணம் தீட்டுதல்

மேற்படி ஆலயத்தின் இராசகோபுரத்திற்கு வர்ணம் தீட்டுவதற்குத் தகுதி வாய்ந்த **வர்ணம் தீட்டுபவர்களிடமிருந்து** உத்தேச மதிப்பீட்டுத் தொகை விவரம் கோரப்படுகிறது.

இது சம்பந்தமாக சகல விவரங்களையும் ஆலய தர்மகர்த்தா சபையினருடன் நேரில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

- மேற்படி **தேவஸ்தான தர்மகர்த்தா சபை.**

(C/17033)

## 16 ஆம் நாள் நினைவாஞ்சலி

### கலாபூஷணம் ஆறுமுகம் ஜீவரட்ணம்

ஊருணி நீர் நிறைந்த
உத்தமா!
உயர்ந்து வாழ்ந்த
தேர்க்கலை அரசே!
தெய்வச் சிற்பியே
கலைக்கு வேந்தே!
ஆருளர் உனைப்போலிங்கே
ஐயநீ! மறைந்து இன்று
நாள் பதினாறாயிற்று
நம்பவே முடியவில்லை
நீர்பொலி சடையைச்
சூடும்
நிமலன்தாள் நீ இருப்பாய்!

தேவி தொலைத் தொடர்புச் சேவை,
*77 ஆடியபாத வீதி, திருநெல்வேலி.*

(88815)

## கண்ணீர் அஞ்சலி

### வெள்ளையன் - மாணிக்கம்

யாழ்.தபாலக உதவித் தபாலதிபர்
மாணிக்கம் நாகேந்திரம் அவர்களின் தந்தையார்
**வெள்ளையன் மாணிக்கம்** அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ் பிரதம தபாலதிபரும்,
உத்தியோகஸ்தர், ஊழியர்களும்.

(88807)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பிரதம தபால்க ஓய்வுபெற்ற பிரதிப் பிரதம தபாலதிபர்

**அமரர் சிவசம்பு சிவயோகேஸ்வரன்**

மாநிலம் போற்றும்
மகத்தான சேவைதனை
மனதார செய்து
மனதினைப் பதித்த மைந்தா!
உன் புகழ் பரவட்டும்!

அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யாழ்ப்பாணம்.*

பிரதம தபாலதிபரும்,
உத்தியோகத்தரும்,
ஊழியர்களும்.

(88806)

# வன்னிக்கு மருந்துகள் இன்று அனுப்பப்படும்

வவுனியாவிலிருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு மருந்துப் பொருள்களை இன்று வெள்ளிக்கிழமை அனுப்பி வைப்பதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு விட்டதாக மாகாண சுகாதார சேவைப் பிரதிப் பணிப்பாளர் திருமதி ஏ.யோகநாதன் தெரிவித்தார்.

விசர் நாய்க் கடிக்கான மருந்து உட்பட பல மருந்துப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும்-

ஆயினும் போர் மருந்துகள் எனக் கருதப்படும் வலி நிவாரண மருந்துகள், குளோரோபோம் உட்பட மயக்க மருந்துகள் மற்றும் பன்டேஜ்கள ஆகியவை அனுப்பப்படவில்லை என்றும் பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

அடம்பன், பெரியபண்டிவிரிச்சான், விடத்தல்தீவு, வெள்ளாங்குளம், நெடுங்கேணிப் பகுதிகளுக்கும், கிளிநொசசி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கும் இரண்டாம் காலாண்டுக்கான மருந்துப் பொருள்களே தற்போது அனுப்பப்பட உள்ளன. (உ-ஒ)

# இராணுவச் செய்திகளை எழுதும் ஊடகவியலாளருக்குக் கருத்தரங்கு

கொழும்பு,ஜூன்8

இராணுவ விவகாரங்கள் மற்றும் களமுனைத் தகவல்களை மக்களுக்கு அளிக்கும் ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்குத் தொடர் நேற்றுக் கொழும்பில் ஆரம்பமானது.

தகவல் திணைக்களத்தின் அனுசரணையுடன் விசேட ஊடகத் தகவல் நிலையமும் முப்படைத் தலைமைப் பீடங்களும் இணைந்து நடத்தும் இந்தக் கருத்தரங்குத் தொடர் நேற்று விசேட ஊடகத் தகவல் நிலையக் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இராணுவ தளபாடங்கள் தொடர்பான பூரண விளக்கங்கள் மற்றும் பல விடயங்கள் குறித்து இந்தக் கருத்தரங்கில் விளக்கப்பட்டது.

கூட்டுப்படைத் தளபதி ரொஹான தளுவத்தவின் வேண்டுகோளின் பேரிலேயே இந்தக் கருத்தரங்குத் தொடர் நடத்தப்படுகிறது.

தொடர்ந்து ஜூலை 3ஆம் திகதி வரை இரண்டு நாள்களுக்கு ஒரு தடவை இரண்டரை மணிநேரக் கருத்தரங்குத் தொடர் கூட்டுப்படைத் தலைமையகத்தில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

# விளையாட்டுத்துறை அதிகாரியை அமைச்சர் ஒருவர் மிரட்டினாராம்!

கொழும்பு,ஜூன்8

கலைக்கப்பட்ட கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையின் உயர் அதிகாரியொருவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று விளையாட்டுத்துறை அமைச்சின் உயர் அதிகாரி ஒருவரை அமைச்சர் ஒருவர் மிரட்டி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தமிரட்டல், குறித்த அதிகாரிக்கு தொலைபேசி மூலமாக விடுக்கப்பட்ட வேளை, அவ்வதிகாரி தான் தனது பணியையே செய்ததாகவும், தான் எந்தவொரு தனிப்பட்டவரின் சம்பளத்திலும் வாழவில்லை எனவும் பதிலளித்தாராம். அத்துடன் இவ்விடயததை விளையாட்டுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்லவின் கவனத்துக்கும் அவர் கொண்டுவந்துள்ளார். ஜனாதிபதியுடன் தனக்கு ஒரு சந்திப்பை ஏற்படுத்தித் தருமாறும் அந்த அதிகாரி விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்டுள்ளார்.

இந்த அதிகாரி முன்பு அமைச்சர் தொண்டமானின் அமைச்சில் மூத்த அதிகாரியாகப் பணியாற்றியவர். அப்போது வெளிநாட்டில் அமைச்சர் இருந்தவேளை, அவரது காரை அமைச்சரின் குடும்ப உறுப்பினர் ஒருவரின் பாவனைக்குக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. இதனை அவர் ஏற்க மறுத்துவிட்டார்.

இத்தகைய துணிச்சலான - நடுநிலையான - அதிகாரியே மிரட்டப்பட்டிருப்பதாகக் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. (உ)

## நோர்வே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தும், முதல் நடவடிக்கையாக, கொழும்புக்கான இந்தியத் தூதரைச் சந்தித்துப் பேசியதாகத் தெரிய வந்தது.

தேக்கமடைந்திருக்கும் சமாதானப் பேச்சுகளுக்கான முன்முயற்சிகளை மீண்டும் தொடர்வதற்கான வாய்ப்புகள் குறித்து நோர்வே தூதுக்குழுவினர் தமது தற்போதைய ஸ்ரீலங்கா விஜயத்தின் போது சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சு நடத்துவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-ஒ-10)

## மரணமான நான்கு புலிகள்

வவுனியா,ஜூன்8

தமது தரப்பில் நான்கு உறுப்பினர்கள் களப்பலியாகியுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை முகமாலைப் பகுதியில் இராணுவத்தினருடனான மோதலில், வீரவேங்கை மனோகரன் (துரைச்சாமி மனோகரன் - முல்லைத்தீவு) என்பவரும்,

நேற்று முன்தினம் புதன்கிழமை ம்ணலாறு பகுதியில் இடம்பெற்ற எதிர்பாராத மோதலில் லெப்டினன்ட் பார்த்திபன்(கணேசலிங்கம் துஸ்யந்தன் - திருமலை), கப்டன் ஓவியன் (தணிகாசலம் ரகுராம் - கிளிநொச்சி) ஆகியோரும் -

கடந்த மாதம் 24 ஆம் திகதி மட்டக்களப்பு, கிரானில் நடந்த எதிர்பாராத மோதலில் லெப்டினன்ட் கயல் இன்பன் (கந்தசாமி விஜயகுமார் - மட்டக்களப்பு) என்பவரும் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துளனர். (உ-ஒ)

## தொலைக்கல்வி ஆசிரியருக்கு!

யாழ்ப்பாணம்,ஜூன்8

1999 - 2002 தொலைக்கல்விப் பயிற்சி ஆசிரியர்களுக்கு பகுதி - II விசேட பாடநெறிகளுக்குரிய திசைமுக செயலமர்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிககு ஆரம்பமாகும் என்று சிரேஷ்ட போதனாசிரியர் திரு.ச.சரவணமுத்து அறிவித்துள்ளார். (உ)

## வட்டார மாநாடு

யெகோவாவின் சாட்சிகளுடைய வட்டார மாநாடு "கடவுளை நேசியுங்கள் - உலகக் காரியங்களை அல்ல" எனும் பொருளில் நாளையும் அடுத்த நாளும் காலை 9.30 மணி முதல் பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள லொயலாஸ் கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாளை காலை 10.00 மணிக்கு "ஏன் கடவுளை நேசிக்க வேண்டும், இந்த உலகத்தை அல்ல" என்ற அறிமுக உரையும் -

நாளை மறுதினம் பிற்பகல் 1.30 மணிக்கு "அன்பாலும் விசுவாசத்தாலும் உலகை ஜெயித்தல்" என்ற பொருளில் பகிரங்கப் பேச்சும் - இடம்பெறும். (உ-ஒ)

## கேரதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திறப்பது ஒரு நம்பிக்கை தரும் நல்லெண்ண முயற்சியாகும்.

இதற்கு அரசும், இராணுவமும் ஒத்துழைக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

எனவே எமது வேண்டுகோளைப் பரிசீலித்து, அதனை நிறைவேற்ற ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்" - என்று உள்ளது. (உ-ஒ)

## திருமலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரிப்பு என்ற இடத்தில் நேற்றுக் காலை 8 மணியளவில் வீதித் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தியதில் சிப்பாய் ஒருவர் பலியானதாக மற்றொரு செய்தி நிறுவனம் தெரிவித்தது. (உ-ஒ)

# பிக்குகள் இல்லாததால் அரச நிகழ்வு ரத்து

கொழும்பு,ஜூன்8

பௌத்த துறவிகளுக்கு குருப் பட்டம் வழங்க அரசு ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு, போதுமான துறவிகள் கிடைக்காததால் பிற்போடப்பட்டதாக இணையத் தளம் ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை பௌத்த மதம் இலங்கைக்கு வந்த தினமாகக் கருதப்படும் பொசன் போயா தினமாகும்.

அன்று பௌத்த துறவிகளுக்கு குருப் பட்டம் வழங்கி, அவர்களை விகாரைகளுக்குப் பொறுப்பானவர்களாக்குவதற்காக அரசாங்கம் விழா ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

இதற்காக சுமார் 1000 பௌத்த துறவிகள் தேவை என்று விளம்பரங்கள் வெளியிடப்பட்டன.

ஆனால் சுமார் 600 துறவிகளிடமிருநது மட்டுமே குருப் பட்டம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

எதிர்பார்த்ததை விட துறவிகளின் எண்ணிக்கை குறைவாக இருந்ததால், குருப்பட்டம் வழங்கும் நிகழ்வு ஒத்திப்போடப்பட்டுள்ளதாகவும் -

தற்போது விண்ணப்பித்துள்ள துறவிகளை விகாரைகளில் அனுமதித்து விட்டுப், பின்னர் அவர்களுக்கு குருப் பட்டம் வழங்கப் போவதாகவும்-

பௌத்த விவகாரங்களுக்கான அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த அமைச்சு பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் பொறுப்பிலுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளும்படி தமிழ் உறுப்பினர்களுக்கு அவர் தனித் தனியே அழைப்பு விடுத்தார்.

பேச்சு தொடர்பாக அரசு கடைப்பிடிக்கும் பிடிவாதப் போக்கு உட்பட இனப்பிரச்சினை குறித்த விவகாரங்கள் இந்தக் கலந்துரையாடலின் போது ஆராயப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-ஒ-8)

## யாழ்.மீனவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திக்கப்படும் தூரத்தையும் நேரத்தையும் அதிகரிக்கும்படி கடற்றொழில் அமைச்சரிடம் மீனவப் பிரதிநிதிகள் கோரியுள்ளதாகவும் -

ஆனால் இது குறித்து பாதுகாப்பு அமைச்சுதான் முடிவு செய்ய வேண்டும் எனவும், ஆகவே பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் ஆலோசித்துவிட்டு முடிவு வெளியிடப்படும் என்றும் அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்ததாகவும் -

கடற்றொழிலாளர் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இதேசமயம் -

தம்பட்டி, எழுவைதீவு, காரைநகர் ஆகிய பகுதிகளை அண்டிய கடற்பிரதேசங்களில் மீன்பிடிக்கும் தூரத்தை 750 மீற்றர்கள் விஸ்தரிக்கவும்,அனைத்துப் பகுதிகளிலும் மீன்பிடிக்கும் நேரத்தை அரை மணி நேரம் அதிகரிக்கவும் விரைவில் நடவடிக்கை எடுப்பதாக கடற்றொழில் அமைச்சர் உறுதியளித்ததாகச் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.நாடாளுமன்ற உறுப்பினர்கள் தி.மகேஸ்வரன், எஸ்.சிவதாசன், சி.தவராசா, மாவை சேனாதிராசா, வீ.ஆனந்தசங்கரி ஆகியோர் இந்தச் சந்திப்பின்போது சமுகமளித்திருந்தனர். (உ-ஒ-10)

## பிரிந்தவர்களை மீள இணைக்கும் திட்டம்

கொழும்பு,ஜூன்8

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரின் பிரிந்த குடும்பங்களை மீள இணைக்கும் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் 59 பேரை, அவர்களது குடும்பங்களுடன் இணைத்து வைத்துள்ளதாக அந்தச் சங்கம் வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

## தடையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அகற்றிவிட்டால் சமாதான பேச்சுக்களை உடனே ஆரம்பித்து விடலாம். இனவாதிகளின் அழுந்தங்களுக்குள் அகப்பட்டுள்ள அரசு, தீர்வு விடயத்தில கொண்டுள்ள விடாப்பிடியை முற்றாகத் தளர்த்த வேண்டும்.

நோர்வேயின் முயற்சியால் உருவான, போர்நிறுத்தம், மனித உரிமைகள் நிலைநிறுத்தப்படல் போன்ற இணக்கப்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல அரசு முன்வர வேண்டும்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனத்துவக் கற்கை நெறிகளுக்கான நிறுவனப் பணிப்பாளர் கலாநிதி ராதிகா குமாரசுவாமி, மாற்றுக் கொள்கைகள் மையத்தின் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் ஜெகான் பெரேரா ஆகியோர் உட்பட மனித உரிமைகள் ஆர்வலர்கள் 10 பேர் மகஜரில் கையெழுத்திட்டிருந்தனர்.

நோர்வேயின் சிறப்புத் தூதர் எரிக் சொல்ஹெய்ம், அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் த்ரொப்ஜோன் ஜக்லண்ட் ஆகியோர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை நேற்றுச் சந்திப்பதற்கு சில மணிநேரங்கள் முன்னதாக, மேற்படி சம்மேளனம் தனது மகஜரை ஜனாதிபதியிடம் கையளித்திருந்தது குறிப்பிடத்தக்கது.(ஒ-10)

கணக்கீடு
A/L 2002
ஒப்படைக்கணக்கு
ஆரம்பம்: நாளை (09-06-2001) சனி 8.30 a.m.
ஆசிரியர்: S.தவா
B.Com. (Hons) (Acc. Spl.)
NIRU TUITION CENTRE
(88811) KONDAVIL.

கணனி இயக்குநர் தேவை
பிரபல தனியார் கல்விசார் நிறுவனம் ஒன்றுக்கு கணனி இயக்குனர் தேவை MS - OFFICE, COREL DRAW அறிவு, ஆங்கிலம், தமிழ் தட்டச்சு வேகம், முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை. சுய விவரத்துடன் இல.38, கோயில் வீதி, யாழ்ப்பாணம என்னும் முகவரிக்குவிண்ணப்பிக்குக.
- நிர்வாகி .
(88804)

துரிதமீட்டல் & வினாவிடை வகுப்பு!
A/L - 2002
LOGIC - (பகுதி -II)
&
குறியீட்டு அளவையியல்
எஸ்.எஸ்.மனோகரன்
★பிந்திவரும் அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
ஆரம்பம்:
பிரிவு - 1 : 10.06.2001 காலை 10மணி
பிரிவு - 11 : 11.06.2001 மாலை 3.30மணி
BEACON (88803) யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி)

SUBRA (14)
Sithankerny
A/L 2003
★ English Medium ★
(Science and Maths)
Classes Commence
On - 9/6/2001
at 4.30 P.M.
Classes will we Conducted by excellent and experienced Lecturers
The Light House of Higher Education is SUBRA (14)
(C/16909)

NEW SCIENCE COLLEGE
பௌதிகவியல்
இ.குகன் (B.Sc.)
2002/2003
"சடப்பொருள்களின் இயல்பு"
சனி, ஞாயிறு - 6-7a.m.
நாளை ஆரம்பம்.
(88780)

LOGIC
வெளிவந்துவிட்டது
விஞ்ஞானிகளும் கோட்பாடுகளும்
ஆசிரியர்:-
S.R.J.சுதன்
இந்நூல் கிடைக்கும் புத்தகசாலைகள்:-
* பூபாலசிங்கம் - யாழ்.
* ஸ்ரீலங்கா - யாழ்.
* மக்மிலன் - யாழ்.
* தமிழ் பூங்கா } நெல்லியடி.
* மொடேன் }
(88755)

Easy way to Information Technology
JAVA
Start on :-
10-06-2001, 4.00 P.M
STP
Computer World (Pvt) Ltd.
54A, Palaly Road, Jaffna

## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளியம்மை மகாலிங்கம்

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் றோட், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வள்ளியம்மை மகாலிங்கம் நேற்று (07.06.2001) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மகாலிங்கத்தின் (தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்) அன்பு மனைவியும் பிரியா, பிருந்தா, பிரியதர்ஷினி, பிரதீபன், பிரசாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சின்னத்தம்பி, சுப்பையா, ரவி, ஜோகேஸ் வரன், சாந்தா, திலகம், ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2001) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் றோட்,
உடுவில். (C-17038)

தகவல்:
மு.மகாலிங்கம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.06.2001 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.